KEY CONCEPTS • ADVOCACY
HUMAN RIGHTS •
CONTRACEPTION • SOCIAL
MEDIA • LAW •
COMMUNICATION
MYTHS • COMMUNICATION
SOCIAL MEDIA • முக்கிய
கருத்துக்கள் • பிரச்சாரம் • மனித
உரிமைகள் • கருத்தடை சாதனங்கள்
சமூக ஊடகம் • சட்டம் • தகவல்
பரிமாற்றம் • மூடநம்பிக்கைகள்
தகவல் பரிமாற்றம் • சமூக ஊடகம்

களங்கப்படுத்துவதைக் கைவிடுவோம்

KEY CONCEPTS • ADVOCACY
HUMAN RIGHTS •
CONTRACEPTION • SOCIAL
MEDIA • LAW •
COMMUNICATION
MYTHS • COMMUNICATION
SOCIAL MEDIA • முக்கிய
கருத்துக்கள் • பிரச்சாரம் • மனித
உரிமைகள் • கருத்தடை சாதனங்கள்
சமூக ஊடகம் • சட்டம் • தகவல்
பரிமாற்றம் • மூடநம்பிக்கைகள்
தகவல் பரிமாற்றம் • சமூக ஊடகம்

Abort The Stigma
A tool kit

Abortion stigma is a powerful deterrent to accessing safe abortion services. As a result, a woman dies every two hours due to unsafe abortion. Despite decades of progressive law, policy reform and huge strides in developing and providing transformative methods to perform abortion (including medical abortion pills), much remains to be done.

This toolkit draws on materials created as part of CREA's #AbortTheStigma campaign, that seeks to normalize conversations around safe abortion. In addition, it draws on the curriculum developed for CREA and CommonHealth's annual Abortion, Gender and Rights Institute.

This toolkit is meant for broadest possible use by trainers, activists, teachers, front-line health workers, peer educators, community-based volunteers and civil society organizations working on issues of comprehensive sexuality education (CSE), women's rights, health, gender and sexuality.

களங்கப்படுத்துவதைக் கைவிடுவோம்

ஓர் பிரச்சார உபகரணம்

கருக்கலைப்பு செய்துகொள்ளும் பெண்களை களங்கப்படுத்தும் வகையிலான சில தவறான கருத்துக்களும், கண்ணோட்டங்களும் நம் சமூகத்தில் பரவலாக காணப்படுகிறது. பாதுகாப்பான கருக்கலைப்பு சேவையை நாடுவதில், "களங்கப்படுத்துதல்" என்பது ஒரு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. அதன் விளைவாக, பல பெண்கள் பாதுகாப்பில்லாத கருக்கலைப்பு சேவை வழங்குபவரிடம் செல்ல வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர். அது, அவர்களின் உடலுக்கும் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கிறது. இந்தியாவில், பாதுகாப்பில்லாத கருக்கலைப்பினால் இரண்டு மணி நேரத்திற்கு ஒரு பெண் மரணமடைகிறாள். அதாவது ஒவ்வொரு நாளும் 48 பெண்களை நாம் இழந்துவருகிறோம் என சமீபத்திய புள்ளிவிவரம் ஒன்று தெரிவிக்கிறது.

நம்நாட்டில், கருக்கலைப்பு சட்டம் கொண்டுவரப்பட்டு 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. கடந்த அரை நூற்றாண்டு காலமாக, அரசு சில ஆக்கபூர்வமான கொள்கை மாற்றங்களை கொண்டு வந்துள்ளது. கருக்கலைப்பு செய்யப்படும் வழி முறைகளிலும் எளிய மற்றும் புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. தற்பொழுது மாத்திரைகள் மூலம் கருக்கலைப்பு செய்வதும் நடைமுறையிலுள்ளது. இருப்பினும், கருக்கலைப்பு என்பது இன்றும் பல ஏழைப் பெண்களுக்கு ஒரு எட்டாக் கனியாகவே உள்ளது. எனவே, கருக்கலைப்பு குறித்து நாம் செய்யவேண்டிய பணிகள் இன்னும் நிறைய உள்ளது.

"கருக்கலைப்பு செய்துகொள்பவர்களை களங்கப்படுத்துவதைக் கைவிடுவோம்" என்ற ஒரு பிரச்சாரத்தை கிரியா (CREA) என்ற நிறுவனம் முன்னெடுத்து நடத்தி வருகிறது. அப்பிரச்சாரத்தில் பயன்படுத்திய சில உபகரணங்களையும், கருத்துக்களையும் தொகுத்து இந்த ஆவணம் உருவாக்கப்பட்டுள்ளது. கருக்கலைப்பு என்பது இயல்பானது மற்றும் எதார்த்தமான ஒன்றுதான் என்ற புரிதலை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், கிரியா மற்றும் காமன்ஹெல்த் அமைப்புகள் இணைந்து நடத்திவரும் "கருக்கலைப்பு, ஆண், பெண் சமத்துவம் மற்றும் பெண்ணுரிமைகள்" என்ற சிறப்பு பயிற்சி வகுப்பின் பாடத் திட்டங்களில் இடம்பெற்றுள்ள விஷயங்களும் இவ்வாவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பெண்ணுரிமைகள், நலவாழ்வு, ஆண்–பெண் சமத்துவம், பாலியல் குறித்து பணி செய்துவரும் சமூக பணியாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர்கள் மற்றும் கிராமஅளவில் பணிபுரியும் தன்னார்வலர்கள் என பலரும் பயன்பெறும் வகையில் இந்த உபகரணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மொழி • பாதுகாப்பான கருக்கலைப்பு
வழிகாட்டுதல் • வார்த்தைகள் • மனித
உரிமைகள் • படக்காட்சிகள்
வழிகாட்டுதல் • பாதுகாப்பான
கருக்கலைப்பு • வார்த்தைகள் • மொழி
பார்வையாளர்கள் • படங்கள்
ஒப்புதல் • மொழி • அமைப்பு
பொருளடக்கம் • வழிகாட்டுதல்
பாதுகாப்பான கருக்கலைப்பு • மொழி
மனித உரிமைகள் • படக்காட்சிகள்
வழிகாட்டுதல் • பார்வையாளர்கள்
மனித உரிமைகள் • பாதுகாப்பான
அமைப்பு • ஒப்புதல் • **கருக்கலைப்பு +**
பொருளடக்கம் • **தகவல் பரிமாற்றம்**
கருக்கலைப்பு • அமைப்பு • மொழி
படங்கள் • வழிகாட்டுதல் • படக்காட்சிகள்
பாதுகாப்பான கருக்கலைப்பு
வார்த்தைகள் • வழிகாட்டுதல் • மொழி
பார்வையாளர்கள் • ஒப்புதல்
அமைப்பு • படங்கள் • வழிகாட்டுதல்
பொருளடக்கம் • மனித உரிமைகள்
மொழி • ஒப்புதல் • வார்த்தைகள்
படக்காட்சிகள் • அமைப்பு
வழிகாட்டுதல் • ஒப்புதல்
பொருளடக்கம் • மொழி

கருக்கலைப்பு + தகவல் பரிமாற்றம்

வார்த்தைகள்

பொதுவாக, கருக்கலைப்பு குறித்து நாம் பயன்படுத்தும் பல வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்கள் கருக்கலைப்பு என்பது தவறானது என்ற கருத்துக்கு வலுசேர்க்கும் வகையில் உள்ளது. எனவே, கருக்கலைப்பு என்பது பெண்களின் தேர்வு மற்றும் அது அவர்களின் உரிமை என்பதை நிலைநாட்டும் வகையிலான பொருத்தமான மற்றும் தெளிவான சொற்களைப் பயன்படுத்த வேண்டும். இந்த வழிகாட்டியானது, கருக்கலைப்பு குறித்து பொதுவாக பயன்படுத்தப்படும் வார்த்தைகளை ஆண், பெண் சமத்துவம் மற்றும் பெண்களின் உரிமை என்ற கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து, அதற்குப் பதிலாக சரியான வார்த்தைகளை எப்படிப் பயன்படுத்துவது எனப் பரிந்துரைக்கிறது.

பயன்படுத்தக் கூடாதவை	**பயன்படுத்த வேண்டியவை**	**என்ன காரணம்?**
கருக்கலைப்பு என்பது சட்டப்படி குற்றம்	*பின்வரும் சூழ்நிலைகளின் படி....*	*ஒரு சில குறிப்பிட்ட காரணங்களுக்காக கருக்கலைப்பு செய்து கொள்வதற்கு சட்டப்படி அனுமதி உண்டு.*
பயன்படுத்தக் கூடாதவை	**பயன்படுத்த**	**என்ன காரணம்?**
குழந்தையை கலைத்தல்; குழந்தையை அழித்தல்	*ஒரு கர்ப்பத்தை கலைப்பதற்கு கருக்கலைப்பு செய்து கொள்ளலாம்*	*‘குழந்தை’ என்ற சொல்லை மருத்துவ ரீதியாக பயன்படுத்துவது சரியல்ல, ஏனெனில் அது ஒரு நபரை குறிப்பிடும் சொல் லாகும். கரு அந்த நிலைக்கு வளரவில்லை. ஆகவே ஒருகுழந்தையை அழித்துவிடு என்று கூறுவது எதிர்மறையான விளைவு களை ஏற்படுத்தும். மேலும் அது ஒரு கடினமான சொல்லாகும்.*

பயன்படுத்தக் கூடாதவை	பயன்படுத்த	என்ன காரணம்?
பெண் கருக்கொலை; பாலின படுகொலை; பெண் குழந்தையை கலைத்தல்	பாலினத் தேர்வின் அடிப்படையில் கர்ப்பத்தை கலைப்பது	கருக்கலைப்பைப் பற்றி பேசும்பொழுது 'கொலை' என்ற அர்த்தம் பொதிந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவது சரியல்ல.
பயன்படுத்தக் கூடாதவை	**பயன்படுத்த**	**என்ன காரணம்?**
ஒரு குழந்தையை அழித்துவிடு; பிறக்கும் முன்பே குழந்தையை கொன்றுவிடு	கர்ப்பத்தை தொடர வேண்டாம் என முடிவு செய்தல்	'அழித்துவிடு' அல்லது 'கொன்றுவிடு' என்ற எதிர் மறையான விளைவை ஏற்படுத்தும் வார்த்தைகளை பயன்படுத்தக் கூடாது மேலும் ஒரு கர்ப்பத்தை 'சிசு' அல்லது குழந்தை என்று குறிப்பிடுவது மருத்துவ ரீதியாக தவறு.
பயன்படுத்தக் கூடாதவை	**பயன்படுத்த**	**என்ன காரணம்?**
சிசு; இறந்த கரு; பிறக்காத சிசு; பிறக்காத குழந்தை	பத்து வாரங்களுக்கு உட்பட்ட கர்ப்பத்தை முன் பருவ கரு என்றும் பத்து வாரங்களுக்கு மேலான கர்ப்பத்தை பின்பருவக் கரு என்றும் கூறப்படுகிறது.	கரு அல்லது பூரண வளர்ச்சி பெறாத கருவால் தனித்து வாழ முடியாது. 'கர்ப்பத்தில் வளரும் குழந்தை' என்ற சொல், சமீபகாலமாக பயன்பாட்டிற்கு வந்த ஒரு சொல். இது கருக்கலைப்பிற்கு எதிரானது மற்றும் ஒரு முரண்பாடான சொல்லாகும். ஒரு குழந்தை பிறந்த பிறகு தான் மனித உரிமைகள் துவங்குகிறது. ஆகவே கர்ப் பத்தில் உள்ள கருவை குழந்தை என்று குறிப்பிடுவது மருத்து ரீதியாக சரியல்ல.

“

பழக்கத்தில் உள்ள வார்த்தைகள் மற்றும் சொற்களைப் பயன்படுத்தி ஒரு வழிகாட்டியை தயாரிக்கவும். கருக்கலைப்பு தொடர்பான பணிகளை செய்துவரும் தோழமை நிறுவனங்கள் இத் தகவல்களை எப்படி பரிமாறிக்கொள்கின்றன என்ற அனுபவங்களைக் கேட்டு அதனையும் சேர்த்துக்கொள்ளவும்

”

பயன்படுத்தக் கூடாதவை	பயன்படுத்த வேண்டியவை	என்ன காரணம்?
ஒரு குழந்தையை அகற்றிவிடு, கருவில் இருக்கும் குழந்தையை கொன்றுவிடு	கருக்கலைப்பை தேர்வு செய் ; ஒரு கர்ப்பத்தைக் கலைத்துவிடு	பெண்களைக் குற்றவாளியாக்கக் கூடாது. கர்ப்பத்தை தொடரலாமா அல்லது வேண்டாமா என தேர்வு செய்யும் உரிமை பெண்களுக்கு உண்டு.
பயன்படுத்தக் கூடாதவை	பயன்படுத்த வேண்டியவை	என்ன காரணம்?
கருக்கலைப்பைத் தடை செய்; கருக்கலைப்புகளின் எண்ணிக்கையை குறை	திட்டமிடாத கர்ப்பத்தை தடுக்கவும்; திட்டமிடாத கர்ப்பத்தின் எண்ணிக்கைகளைக் குறைக்கவும்.	திட்டமிடாத கர்ப்பம் நிகழும் பொழுதுதான் பெண்கள் கருக்கலைப்பை நாடுகின்றனர். ஆகவே திட்டமிடாத கர்ப்பத்தை தவிர்க்க வேண்டும். மற்றும் அதன் எண்ணிக்கையை குறைக்க வேண்டும்.

பின்வரும் சொற்களுக்குப் பதிலாக
மாற்று சொற்களைப் பயன்படுத்தவும்

சட்டத்திற்குப் புறம்பான கருக்கலைப்பு



பாதுகாப்பற்ற கருக்கலைப்பு

சட்டத்திற்கு புறம்பான கருக்கலைப்பு சட்டத்தை மீறிய செயல்
இது பாதுகாப்பானதாகக் கூட இருக்கலாம்

பாதுகாப்பற்ற கருக்கலைப்புகள் பயிற்சி பெறாத நபர்களால் செய்யப்படுகிறது
(அல்லது) ஒரு பெண் பாதுகாப்பான முறையில் மாத்திரைமூலம் கருக்கலைப்பு சேவையை நாட முடியாதபொழுது நிகழ்கிறது.

இந்த கர்ப்பம் தனக்கு தேவையில்லை என்று
ஒரு பெண் முடிவு செய்வதைத்தான்
தேவையில்லாத கர்ப்பம் என்கிறோம்.

தேவையில்லாத கர்ப்பம்



திட்டமிடாத கர்ப்பம்

திட்டமிடாத கர்ப்பம் என்பது ஒரு பெண்
கர்ப்பம் தரிக்க விரும்பாத பொழுது
நிகழும் கர்ப்பத்தைக் குறிக்கிறது.

திட்டமிடாத கர்ப்பம் அல்லது விருப்பமில்லாத கர்ப்பமானது
தேவையானதாகவோ அல்லது தேவையில்லாத
கர்ப்பமாகவோ இருக்கலாம்.

படக்காட்சிகள்:

பாதுகாப்பான கருக்கலைப்பு குறித்த தகவல்களைப் பரிமாறிக்கொள்வதில், புகைப்படங்களும், படக்காட்சிகளும் முக்கிய பங்குவகிக்கின்றன. ஆகவே, அவற்றை பயன்படுத்தும் பொழுது, மிகுந்த கவனத்துடனும் வெளிப்படையான பொருள்படும்படியும் இருக்க வேண்டும். படக்காட்சிகளை பயன்படுத்தி தகவல் பகிர்வு உபகரணங்களை வடிவமைக்கும் பொழுது இந்த கையேட்டை[1] பயன்படுத்தலாம்.



பயன்படுத்தவேண்டியவை
கர்ப்பத்தை உறுதி செய்யும் பரிசோதனை உபகரணம் அல்லது பரிசோதனையின் முடிவை காண்பிக்கலாம்.



பயன்படுத்தக் கூடாது
வயிறு தெரியும்படியான ஒரு கர்ப்பினி பெண்ணின் புகைப்படத்தை காட்டக் கூடாது

காரணம் என்ன?

பெரும்பாலான கருக்கலைப்புகள் கர்ப்பத்தின் முன் பருவ காலத்தில்தான் நடைபெறுகிறது. அப்பொழுது 'பெண்ணின் வயிறு' வெளியில் தெரியும் வகையில் இருக்காது. ஆகவே, கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் காண்பிப்பது போன்ற புகைப்படம் இருந்தால் அது கருக்கலைப்பு குறித்து ஒரு தவறான கருத்தைத் தோற்றுவிக்கும். பெண்களுக்கு இந்த நிலையில்தான் கருக்கலைப்புகள் நிகழ்கிறது என்ற ஒரு தவறான எண்ணத்தையும் அது ஏற்படுத்திவிடும்.

[1] Adapted from the International Planned Parenthood Federation (IPPF) guide on rights-base d messaging



பயன்படுத்த வேண்டியவை

கருக்கலைப்பு குறித்த விழிப்புணர்வு உபகரணங்களானது கர்ப்பத்தை மையப்படுத்துவதை தவிர்த்து ஒரு தனிநபர் கருக்கலைப்பை எப்படி எதிர்கொள்கிறார் என்பதை விளக்கும்படி இருக்கவேண்டும்.



பயன்படுத்தக் கூடாது

குழந்தையின் புகைப்படத்தை பயன்படுத்தக் கூடாது.

காரணம் என்ன?

கருக்கலைப்பு பற்றிய தகவல்களை வெளிப்படுத்தும் பொழுது குழந்தையின் படம் இடம்பெற்றிருந்தால் அது ஒரு குழப்பமான செய்தியை பார்வையாளர்களுக்கு கொடுப்பது போல அமைந்துவிடும். மேலும் இது ஒரு தவறான கருத்துடன் தொடர்புபடுத்தி பார்க்கும்படி அமைந்துவிடும்.



பயன்படுத்த வேண்டியவை

பெண்களின் சம்மதத்துடன் எடுக்கப்பட்ட புகைப்படங்களை மட்டுமே கூடுமானவரை பயன்படுத்த வேண்டும். ஓவியங்கள், வரைபடங்கள், பொம்மை படங்களை இதற்கு மாற்றாகப் பயன்படுத்தலாம். அது பலதரப்பட்ட பெண்களின் எதார்த்த சூழ் நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் இருக்க வேண்டும். இது, வயது, வேலை, சமூக பொருளாதார நிலை, திருமண நிலை ஆகியவற்றை குறிக்கும்படி இருக்க வேண்டும். பார்வையாளர்களின் சூழ்நிலையை பிரதிபலிக்கும் வகையிலான படக்காட்சிகளை தேர்வு செய்யவேண்டும்.



பயன்படுத்தக் கூடாது

மங்கலான முகம், அல்லது முகம் தெளிவற்ற நிலையில் இருக்கும் பெண்ணின் புகைபடங்களைப் பயன்படுத்தக் கூடாது.

காரணம் என்ன?

மங்கலான முகம் பெண்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை என்பதை குறிக்கும். மேலும் இது வெட்கப்படுகிற அல்லது குற்ற உணர்ச்சியை ஏற்படுத்துகிற செயல் என்றும் குறிக்கக்கூடும்.



பயன்படுத்த வேண்டியவை

ஒரு மருத்துவ முறை எப்படி சித்தரிக்கப்பட வேண்டும் என்று நாம் நினைக்கிறோமோ அதுபோல நடுநிலை தன்மையை பிரதிபளிக்கும் படங்கள் இருந்தால் நன்று



பயன்படுத்தக் கூடாது

பெண்கள் சோகமாக இருப்பது, வருத்தத்துடன் இருப்பது அல்லது அழுவது போன்ற மனநிலையைப் பிரதிபலிக்கும் புகைப்படங்களைப் பயன்படுத்தக் கூடாது

காரணம் என்ன?

கருக்கலைப்பிற்குப் பிறகு ஒவ்வொரு பெண்ணும் பலவிதமான மன உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர். ஆகவே, மிகவும் மகிழ்ச்சியாக அல்லது வருத்தத்துடன் இருப்பது போன்ற படங்களை பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

பயன்படுத்த வேண்டியவை

ஒரு கருவை சித்தரிக்கும்படி உள்ள எந்த படங்களையும் முடிந்தவரை பயன்படுத்த வேண்டாம். கருக்கலைப்பு முறையைப்பற்றி பயனாளிகளுக்கோ அல்லது சேவை வழங்குபவர்களுக்கோ தகவல் தெரிவிக்க விரும்பினால் கரு வளர்ச்சியின் சரியான காலத்தைக் குறிக்கும்படி உள்ள படங்களை பயன்படுத்தவும் (உ.ம்: கருவின் ஆறு வாரகால வளர்ச்சி)



பயன்படுத்த கூடாது

மூன்று மாதங்களுக்கு மேலாக கருவின் படங்களைப் பயன்படுத்தக் கூடாது

காரணம் என்ன?

பெரும்பாலான கருக்கலைப்புகள் கர்பத்தின் முதல் மூன்று மாதத்திற்குள் நிகழ்கிறது. ஆகவே, மூன்று மாதத்திற்கு மேலாக இருக்கும் கருவின் படத்தைப் பயன்படுத்தினால் பெரும்பாலான கருக்கலைப்புகள் சரியான காலத்தில் நடப்பதில்லை என்ற அடிப்படையற்ற கருத்தை நிலைநிறுத்தும்படி அமைந்துவிடும்.



பயன்படுத்த வேண்டியவை

கண்ணைக் கவரும் வண்ணங்கள், வெவ்வேறு கோணங்களில் உள்ள படங்கள் மற்றும் தெளிவாக வடிவமைக்கப்பட்ட படங்களை பயன்படுத்துவதன் மூலமாக பார்வையாளர்களின் கவனத்தை ஈர்க்கலாம். இது வரைகலை படங்களைப் பயன்படுத்துவதை விட சிறந்தது



பயன்படுத்த கூடாது.

பயத்தை ஏற்படுத்தும் வகையிலான படங்களைப் பயன்படுத்தக் கூடாது.

காரணம் என்ன?

வரைகலை படங்கள் மற்றும் அதிர்ச்சியூட்டும் படங்கள் பார்ப்பவர்களின் கவனத்தை ஈர்க்கலாம். ஆனால் இவை மக்கள் மனதில் வேதனை மற்றும் கவலையை ஏற்படுத்தும்படி அமைந்துவிடும். இதன் காரணமாக கருக்கலைப்பை பயம், பேரதிர்ச்சி மற்றும் இதர எதிர்மறையான விஷயங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் நிலை ஏற்படும்.

நீங்கள் பயன்படுத்தும் வார்த்தைகள் மற்றும் படங்கள் சரியானதா என்பதை கண்டறிய பின்வரும் கேள்விகளைப் பயன்படுத்தவும்.

இந்தப் படங்கள் நடுநிலை தன்மையுடன் இருக்கின்றதா? மற்றும்/ அல்லது பெண்களுக்கு தைரியத்தை கொடுக்கும் வகையில் உள்ளதா?
மேலே குறிப்பிட்டுள்ள சில குறிப்பு களின்படி இவை உள்ளதா என்பதைப் பார்த்துக்கொள்ளவும்,

படங்களைப் பயன்படுத்துவதற்கு ஒப்புதல் மற்றும் அனுமதியை நீங்கள் பெற்றுள்ளீர்களா?
படக் காட்சிகளைப் பயன்படுத்து வதற்கான ஒப்புதல் மற்றும் அனைத்து விதமான அனுமதிகளையும் பெற்றிருக்கிறீர்களா? என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

அதில் இடம்பெற்றுள்ள பலவிதமான தகவல்கள் மற்றும் படக்காட்சிகள் ஒன்றோடொன்று முரண்படுகிறா?
நீங்கள் பயன்படுத்தும் உபகரணங்கள் ஒரு கருத்தை வெளிப்படுத்தும்போது அதற்குத் தக்கவாறு படக்காட்சிகள் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

எதற்காக படங்களும் படக்காட்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளது.
இவைகள் சரியாக பயன்படுத்தப் பட்டிருக்கின்றதா என்பதைக் கண்டறிந்து தீர்மானிக்க உதவும். உ.தா: உபகரணங்கள் கண்ணைக் கவரும் வகையில் இருக்க வேண்டும். மேலும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் இருக்க வேண்டும். அதுபோலவே, பார்வையாளர்கள் சூழ்நிலையைத் தொடர்புபடுத்திப் பார்க்கவும் அல்லது விஷயத்துடன் தொடர்பு படுத்திப் பார்க்கும் வகையிலும் இருத்தல் அவசியம்.

பயன்படுத்தும் வார்த்தைகள் யாரையாவது குற்றப்படுத்தும் வகையில் உள்ளதா?
மக்களின் உணர்வுகளை (விருப்பு வெறுப்புகளை) வெளிப்படுத்தும் சொற்றொடர்களைப் பயன்படுத்தும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மேலும் அச்சொற்றொடர்கள் உள்ளூர் / வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யும்போது அதே பொருளில் உள்ளதா என்பதையும் கவனமாக பார்க்க வேண்டும்.

பயன்படுத்தும் மொழி தெளிவாக உள்ளதா?
சொற்கள் எளிமையானதாக இருக்கட்டும். குழப்பமான அல்லது தெளிவற்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

இது ஒரு பிரச்சாரத்திற்கான அரைகூவலா?
பார்வையாளர்கள் மத்தியில் எம்மாதிரியான நடவடிக்கையை நீங்கள் எடுக்க விரும்புகிறீர்கள் என்று குறிப்பிடும் வகையிலோ அல்லது குறிப்பிட்ட சேவைகள் அல்லது தகவல்களைப் பெற அவர்களுக்கு வழிகாட்டும் வகையிலோ இருக்க வேண்டும்.

பெண்களால் தேர்வு செய்யப்படும் மற்றும் அவர்களுக்கு சாதகமான ஒன்றுதான் கருக்கலைப்பு என்கிற ரீதியில் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளனவா?
பெண்களின் சுயசார்பு மற்றும் தேவைகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலான கருத்துக்களை பயன்படுத்தவும்.

பயன்படுத்தும் சொற்கள் தெளிவாகவும் துல்லியமானதாகவும் இருக்கிறதா?
மேலே உள்ள கருத்துப் பட்டியலில் தெரிவித்துள்ளபடி எதைத் தவிர்க்க வேண்டும்? ஏன் தவிர்க்க வேண்டும் என்பதை அறிந்து சரியான பொருள்படும் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை • பெண்களுக்கான கருத்தடை அறுவைசிகிச்சை • பக்க விளைவுகள் கைகளின் சதைப் பகுதியில் பொருத்தப்படும் கருத்தடை மருந்து குச்சிகள் • கருத்தடை ஊசிகள் • சிறந்தவை • கருத்தடை மாத்திரைகள் ஆணுறைகள் / பெண்ணுறைகள் ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை • பெண்களுக்கான கருத்தடை அறுவைசிகிச்சை • கைகளின் சதைப் பகுதியில் பொருத்தப்படும் கருத்தடை மருந்து குச்சிகள் பக்க விளைவுகள் • கருத்தடை ஊசிகள் • சிறந்தது கருத்தடை மாத்திரைகள் • **கருக்கலைப்பு + கருத்தடை** ஆணுறைகள் / பெண்ணுறைகள் சிறந்தது • ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை • கருத்தடை முறைகள் • பெண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை • கைகளின் சதைப் பகுதியில் பொருத்தப்படும் கருத்தடை மருந்து குச்சிகள் • பக்க விளைவுகள் கருத்தடை ஊசிகள் • கருத்தடை மாத்திரைகள் ஆணுறைகள் / பெண்ணுறைகள் ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை பெண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை கருத்தடை மாத்திரைகள் • பக்க விளைவுகள் கைகளின் சதைப் பகுதியில் பொருத்தப்படும் கருத்தடை மருந்து குச்சிகள் • கருத்தடை ஊசிகள் ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை ஆணுறைகள் / பெண்ணுறைகள் • சிறந்தது பெண்களுக்கான கருத்தடை அறுவைசிகிச்சை

கருக்கலைப்பு + கருத்தடை

கருக்கலைப்பு + கருத்தடை

மிகவும் சிறந்தவை

இம் முறைகளைப் பயன்படுத்துவோரில் 99 சதவீதத்திற்கும் மேலானவர்களுக்கு கருத்தரிக்கும் வாய்ப்பு இல்லை.



அவசரகால கருத்தடை மாத்திரைகள்

கிடைக்கும் இடங்கள்

துணை சுகாதார மையம், ஆரம்ப சுகாதார மையம், அரசாங்க மருத்துவ மனைகள் மற்றும் கிராமசுகாதாரப் பணியாளர்கள் (பாதுகாப்பற்ற உடலுறவுக்குப் பின் மூன்று நாட்களுக்குள் அவசரகால கருத்தடை மாத்திரைகளை உட்கொள்ளும் போது கருத்தரித்தலை தடுப்பதில் மிகச்சிறந்தது).



ஆண்களுக்கான கருத்தடை அறுவைசிகிச்சை

கிடைக்கும் இடங்கள்

ஆரம்ப சுகாதார மையம், மற்றும் அதைவிட பெரிய அளவில் உள்ள அரசாங்க மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் (ஆண்களுக்கான சிறந்த கருத்தடை முறையாகும்).



பெண்களுக்கான கருத்தடை அறுவைசிகிச்சை

கிடைக்கும் இடங்கள்

மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையம், அரசாங்க மருத்துவ மனை (பெண்கள் அதிகமாக பயன்படுத்தும் முறையாகும்).



கையின் சதைப் பகுதியில் பொருத்தப்படும் கருத்தடை மருந்து குச்சிகள்

கிடைக்கும் இடங்கள்

குறிப்பிட்ட சில தனியார் மருத்துவமனைகள் (குறைந்த விலை மற்றும் எளிதாக பொருத்திக் கொள்ளும் ஒரு முறை).



கருப்பையினுள் பொருத்தப்படும் செயற்கைத் தடுப்புகள் (IUCD'S)

கிடைக்கும் இடங்கள்

துணை சுகாதார மையம், ஆரம்ப சுகாதார மையம், அரசு மருத்துவமனை, மற்றும் தனியார் மருத்துவ மனைகள்.

ஓரளவு பயனளிப்பவை

இம்முறைகளைப் பயன்படுத்தும் 100 பெண்களில் ஓராண்டில் 6-12 பேர் கர்ப்பமடைய வாய்ப்பு உண்டு



வாய்வழியாக உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகள்

கிடைக்கும் இடங்கள்

துணை சுகாதார மையம் முதல் அரசு மருத்துவமனை என எல்லா அரசு சுகாதார மையங்களிலும் கிடைக்கிறது. கிராமசுகாதார செவிலியர், தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருந்துக் கடைகள்.

(மாலா-N என்ற கருத்தடை மாத்திரை எல்லா அரசு சுகாதார மையங்களிலும் இலவசமாக கிடைக்கிறது)

குறைந்த அளவே பயனளிப்பவை



கருத்தடை ஊசிகள்

கிடைக்கும் இடங்கள்

சில மாவட்டங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார மையங்கள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மாவட்ட அரசு மருத்துவமனை

குறைந்த அளவே பயனளிப்பவை

ஓராண்டில் இம் முறையை பயன்படுத்தும் 100 பெண்களில் 18 பேருக்கு கர்ப்பங்கள் நிகழ வாய்ப்பு உள்ளது.




ஆணுறைகள்

கிடைக்கும் இடங்கள்


துணை சுகாதார மையம் முதல் அனைத்து அரசு மருத்துவ மையங்கள் மற்றும் சுகாதார செவிலியர்கள்

மருந்து கடைகளில் “நிரோத்” என்ற பெயர் கொண்ட ஆணுறைகள் கிடைக்கின்றன. அனைத்து அரசு சுகாதார மைங்களிலும் இலவசமாக கிடைக்கின்றன. சுகாதார செவிலியர் வீடுதேடி வந்தும் இவற்றை இலவசமாக வழங்குகின்றனர்.


இனப்பெருக்க வயதிலுள்ள (15-49 வயது பிரிவில்) திருமணமான தம்பதியரில் கருத்தடை முறைகளைப் பயன்படுத்துவோரின் சதவீதம்




பெண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சையைப் பயன்பத்துவோர் 36 சதவீதத்தினர்



ஆணுறைகள் 5.6 சதவீதத்தினர்







வாய்வழியாக உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகள்
4.1 சதவீதத்தினர்

கருப்பையினுள் பொருத்தப்படும் செயற்கை தடுப்புகள் (IUCD)
1.5 சதவீதத்தினர்

ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை
0.3 சதவீதத்தினர்

கருக்கலைப்பு + கருத்தடை



சில பின்விளைவுகள் ஏற்படலாம்

அவசரகால கருத்தடை மாத்திரைகள்
ஒழுங்கற்ற மாதவிலக்கு மற்றும் முகப்பரு ஏற்படலாம்.

வாய்வழியாக உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகள்
தலைவலி, குமட்டல், மாதவிலக்கு நின்றுபோதல், ஒழுங்கற்ற மாதவிடாய், மனநிலையில் ஏற்ற இறக்கங்கள் மற்றும் முகப்பரு ஏற்படலாம்.

ஆணுறைகள்/ பெண்ணுறைகள்
'லேட்டக்ஸ்' இரப்பரினால் ஏற்படும் ஒவ்வாமை.

கருத்தடை ஊசிகள்
எலும்புகளில் உள்ள தாது பொருட்களின் (கால்சியம்) அடர்த்தியை குறைத்துவிடுதல் மாதவிடாய் நின்று போதல், ஒழுங்கற்ற மாதவிடாய் ஏற்படுதல்.

ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை
அறுவை சிகிச்சை தொடர்பான சிக்கல்கள்.

கருப்பையினுள் பொருத்தப்படும் செயற்கை தடுப்புகள்
சிறுநீர் மற்றும் இனப்பெருக்கத் தடத்தொற்றுகள் ஏற்பட வாய்ப்பு.

பெண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை
அறுவை சிகிச்சை தொடர்பான சிக்கல்கள்.

கைகளின் சதைப் பகுதியில் பொருத்தப் படும் கருத்தடை மருந்து குச்சிகள்
ஒழுங்கற்ற மாதவிடாய், எலும்புகளில் உள்ள தாதுப் பொருட்களின் (கால்சியம்) அடர்த்தி குறைந்துவிடுதல்.

சர்வதேச மனித உரிமைகளுக்கான பிரகடனம் • பாதுகாப்பான கருக் கலைப்பு • கர்ப்பம் • வேண்டியதை தேர்வு செய்யும் உரிமை • சுகாதார சேவையை பெறுவதற்கான உரிமை மற்றும் பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை பாதுகாப்பு • சுதந்திரம் • தனியுரிமை அடிப்படை உரிமைகள் • சர்வதேச மனித உரிமைகளுக்கான பிரகடனம் பாதுகாப்பான கருக்கலைப்பு வேண்டியதைத் தேர்வு செய்யும் உரிமை தனியுரிமை • கர்ப்பம் **கருக்கலைப்பு+** சுதந்திரம் • அடிப்படை **மனித உரிமைகள்** உரிமைகள் • கர்பம் • பாதுகாப்பு சுகாதார சேவையை பெறுவதற்கான உரிமை மற்றும் பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை • பாதுகாப்பு சுதந்திரம் • தனியுரிமை • சுகாதார சேவையை பெறுவதற்கான உரிமை மற்றும் பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை • சரவதேச மனித உரிமைக்கான பிரகடனம் பாதுகாப்பான கருக்கலைப்பு வேண்டியதைத் தேர்வு செய்யும் உரிமைசு • தந்திரம் • தனியுரிமை அடிப்படை உரிமைகள் • பாதுகாப்பு

கருக்கலைப்பு + மனித உரிமைகள்

சரவதேச மனித உரிமைக்கான பிரகடணம் ஐக்கிய நாடுகள் அமைப்பால் 1948 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. இதன்படி ஒவ்வொரு மனிதனும் சுயமாண்புடன் கண்ணியமாக வாழ்வதற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் சுதந்திரமாகவும், நீதி மற்றும் நல்லிணக்கத்துடன் சமமாக வாழ்வதற்கு வழிசெய்வது, அரசின் தலையாய கடமை எனவும் அப்பிரகடனம் தெரிவிக்கிறது.

பாதுகாப்பான கருக்கலைப்பு சேவையை நாடுவது என்பது ஒரு பாலியல் மற்றும் இனப்பெருக்க உரிமையாகும். இது ஒரு அடிப்படை உரிமை என சர்வதேச மனித உரிமைகளுக்கான உடன்படிக்கை தெரிவிக்கிறது. அதில் குறிப்பிட்டுள்ள 12 அடிப்படை உரிமைகளில் பாலியல் மற்றும் இனப்பெருக்க உரிமையும் ஒன்று. இவ்வுடன்படிக்கையை உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டு கையொப்பமிட்டுள்ளது. இதில் சரவதேச மனித உரிமைக்கான பிரகடனம் (UDHR) பொருளாதார சமூக மற்றும் கலாச்சார உரிமைக்கான சர்வதேச உடன்படிக்கை (ICESCR) பொது மற்றும் அரசியல் உரிமைக்கான சர்வதேச உடன்படிக்கை (ICCPR) மற்றும் பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் களை வதற்கான ஒப்பந்தம் (CEDAW) ஆகிய அனைத்தும் உள்ளடங்கும்.

1. நலவாழ்வுச் சேவையை பெறுவதற்க்கான உரிமை மற்றும் பாதுகாப்பாக வாழ்வதற்க்கான உரிமை

உயிர்வாழ்வதற்க்கான உரிமை

அறிவியல் வளர்ச்சியால் ஏற்படும் முன்னேற்றத்தின் பயனை அடைவதற்கான உரிமை

பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைக்கான உரிமையை நிலைநாட்ட அரசாங்கம் சுகாதார சேவைகள் எளிதில் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். அரசு பாதுகாப்பான கருக்கலைப்பு சேவையை வழங்கி பாதுகாப்பற்ற கருக்கலைப்பினால் ஏற்படும் ஆபத்துகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்க வேண்டும்.

பாதுகாப்பான மற்றும் அங்கீகரிக்கப்பட்ட இனப்பெருக்க நல தொழில் நுட்பங்களை ஒவ்வொரு பெண்ணும் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டும். இதில், நவீன கருத்தடை முறைகள், பாதுகாப்பான கருக்கலைப்பு மற்றும் குழந்தையின்மைக்கான மருத்துவ சேவை என பல சேவைகள் இருக்கவேண்டும். மேலும், மேற்சொன்ன முறைகளை பயன்படுத்தும் போது ஏற்படும் பின் விளைவுகளைப் பற்றிய தகவல்களும் அதில் இடம்பெற வேண்டும்.

கருக்கலைப்பு சேவையை பெறுவதில் பொதுவான தடைகள் பல உள்ளன, இதில் கருக்கலைப்பை குற்றப்படுத்துவது, சட்டத்தில் உள்ள சரத்துக்களைப் பற்றிய தெளிவின்மை மற்றும் பாதுகாப்பான கருக்கலைப்பு குறித்த வழிமுறைகள் என்னென்ன உள்ளது? அவற்றை எங்கு பெறுவது என்ற விழிப்புணர்வு இல்லாததும் காரணமாகும். மேலும், பயிற்சி பெற்ற மருத்துவர்கள் இல்லாதது அல்லது தேவையான மருத்துவ உபகரணங்கள் கிடைக்காததும் முக்கிய காரணங்களாகும்.



உலகளவில், ஒவ்வொரு ஆண்டும் 2.5 கோடி

பாதுகாப்பற்ற கருக்கலைப்புகள் நடக்கிறது[1].

உலகளவில் நடக்கும் மகப்பேறு மரணங்களில் **8-11** %பாதுகாப்பில்லாத கருக்கலைப்பின் விளைவாக நிகழ்கிறது.

22,800 - 31,000 வரையிலான இறப்புகள் தடுக்கக்கூடியவை

[1]Global, regional, and subregional classifcation of abortions by safety, 2010–14: estimates from a Bayesian hierarchical model, Lancet 2017

2. வேண்டியதை தேர்வு செய்யும் உரிமை

திருமணம் செய்துகொள்ளலாமா அல்லது வேண்டாமா என முடிவெடுக்கும் உரிமை. மற்றும் குடும்பத்தைத் திட்டமிடும் உரிமை.

குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாமா அல்லது எப்பொழுது பெற்றுக் கொள்ளலாம் என்று முடிவு செய்யும் உரிமை.

திட்டமிடாத மற்றும் தேவையில்லாத கர்ப்பங்கள் ஒரு பெண்ணிற்கு பல விதமான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும். இதில் அவர்களுடைய உறவு முறைகள், பொருளாதார வசதிகள், நல வாழ்வு மற்றும் மருத்துவ சேவைகள் கிடைக்கிறதா? மற்றும் இதர காரணிகளின் பங்கு ஆகியவற்றைப் பொருத்து பாதிப்பின் தன்மை பெண்ணிற்கு பெண் வேறுபடும்.

ஒரு பெண்ணிற்குத் திருமணம் செய்து கொள்ளலாமா அல்லது வேண்டாமா அல்லது குழந்தையை பெற்றுக் கொள்ளலாமா எனத் தேர்வு செய்யும் உரிமை உண்டு. இதன்படி ஒரு பெண் தனக்குத் தேவையான பாலியல் மற்றும் இனப்பெருக்க நல சேவைகளைப் பெறும் உரிமை அவளுக்கு உள்ளது. குறிப்பாக கருத்தடை முறைகள், குழந்தையின்மைக்கான சிகிச்சை, எச்.ஐ.வி. எய்ட்ஸ் உட்பட பாலியல் உறவின் மூலம் பரவும் பலவிதமான தொற்றுக்களைத் தடுத்தல் மற்றும் அதற்கு சிகிச்சை பெறுவதும் இதில் அடங்கும்.

மேற்சொன்ன சேவைகளைப் பெறுவதற்கும் அப்பெண் முடிவெடுப்பதற்கும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும. அதை விடுத்து, அப்பெண்ணையோ அல்லது அவளது முடிவையோ ஒருபோதும் குற்றப்படுத்தக் கூடாது.

கருக்கலைப்பு சேவையை நாடுவது என ஒரு பெண் முடிவெடுப்பது அவருடைய தனிப்பட்ட சூழ்நிலையைப் பொருத்து அமைகிறது. இது அவருடைய தனிப்பட்ட விருப்பம், மற்றும் சுய முடிவு அதனை நாம் மதிக்க வேண்டும். பாலியல் மற்றும் இனப்பெருக்க நல உரிமையை நிலைநாட்டிக்கொள்ள அப்பெண்ணிற்கு நாம் உதவ வேண்டும்.



3. சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமை

விரும்பியதை சுதந்திரமாக செய்வதற்கும் மற்றும் பாதுகாப்பாக வாழ்வதற்குமான உரிமை

தன்னுரிமையைக் காக்கும் சுதந்திரம்,

துன்புறுத்தல் மற்றும் கொடுமைப்படுத்துதல் எதுவுமின்றி சுதந்திரமாக வாழும் உரிமை
.
சமத்துவ உரிமை மற்றும் அனைத்துவிதமான பாகுபாடுகளிலிருந்தும் விடுதலை பெறுவதற்கான உரிமை

பாலினத்தின் அடிப்படையில் ஒரு ஆண் அல்லது பெண் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று சமுதாயத்தால் வரையறுக்கப் பட்டுள்ளது. அதுபோலவே சமூக நிர்பந்தம், ஆண், பெண் உறவு முறைகள் எப்படி இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு போன்ற சில விஷயங்கள் ஒரு தனிநபரின் சுதந்திரத்தை பல்வேறு நிலைகளில் பாதிக்கிறது. ஒரு தேவையில்லாத கர்ப்பம் மற்றும் அக்கர்ப்பத்தை தொடருவதினால் ஒரு பெண்ணிற்கு உடல் மற்றும் மன நலனில் பல பாதிப்புகள் ஏற்படுத்துகிறது.

ஒருவரின் பாலியல் மற்றும் இனப்பெருக்க நலன் என்பது அவரின் தனிப்பட்ட விஷயமாகும். எனவே, அதுகுறித்து முடிவு எடுக்கும் உரிமை பெண்ணிடம்தான் இருக்க வேண்டும்.

ஒரு பாரபட்சமற்ற நிலையில் இருக்கும்போதுதான் ஒருவரால் சுதந்திரமான முடிவுகளை எடுக்கமுடியும். குறிப்பாக, வாழ்க்கைத் துணை, பாலியல் மற்றும் தாய்மை குறித்த அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

மனித உரிமைகளுக்கும் கருக்கலைப்பிற்கும் உள்ள தொடர்புகள், பல்வேறு உடன்படிக்கைகளின்கீழ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது[1].

	சர்வதேச சட்ட உடன்படிக்கைகள்		
மனித உரிமைகள் பாதுகாக்கப்பட்டது	சர்வதேச மனித உரிமைக்கான பிரகடனம் (UDHR)	பொது மற்றும் அரசியல் உரிமைக்கான சரவதேச உடன்படிக்கை (ICCPR)	பொருளாதார சமூக மற்றும் கலாச்சார உரிமைக்கான சர்வதேச உடன்படிக்கை (ICESCR)
விரும்பியதை சுதந்திரமாக செய்வதற்கும் மற்றும் பாதுகாப்பாக வாழ்வதற்குமான உரிமை	சாசனம் 3	சாசனம் 6.1; 9.1	
துன்புறுத்தல் மற்றும் கொடுமைப்படுத்துதலிருந்து விடுதலை, மனிதாபிமானமற்ற முறையில் நடத்துதல் / தண்டனைக்கு உட்படுத்துதல் போன்றவைகளிலிருந்து விடுபடுவதற்கான உரிமை	சாசனம் 5	சாசனம் 7	
பாலின ரீதியான பாகுபாடுகளிலிருந்து விடுதலை	சாசனம் 2	சாசனம் 2.1	
பெண்களை குற்றப்படுத்தும் சம்பிரதாயங்களை மாற்றுதல்			சாசனம் 10.2; 12.1; 12.2
ஆரோக்கியம், இனப்பெருக்க நலன் மற்றும் குடும்ப கட்டுப்பாடு /			
தன்னுரிமை		சாசனம் 17.1	
எத்தனை குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எவ்வளவு இடைவெளியில் குழந்தைகள் பெற்றுக் கொள்வது			

		மாநாட்டு ஆவணங்கள்		
பெண்களுக்கு எதிரான அனைத்துவிதமான பாகுபாடுகளை களைவதற்கான ஒப்பந்தம் (CEDAW)	குழந்தைகள் உரிமைக்கான பிரகடனம் (CRC)	வியன்னா பிரகடனம்	கெய்ரோ பிரகடனம்	பீஜிங் பிரகடனம்
	சாசனம் 6.1; 6.2		கொள்கை 1 பத்தி 7.17; 8.34	பத்தி 96; 106; 108
	சாசனம் 37	பத்தி 56		
சாசனம் 1;3	சாசனம் 2.1	பத்தி 18	கொள்கை 1; 4	கொள்கை 214
சாசனம் 2;5	சாசனம் 34.3	பத்தி 18.49	பத்தி 5.5	பத்தி 224
சாசனம் 10; 11.2; 11.3; 12.1; 14.2	சாசனம் 24.1; 24.2	பத்தி 41	கொள்கை 8 பத்தி 7.45	பத்தி 89; 92; 267
	சாசனம் 16.1; 16.2			பத்தி 106; 107
சாசனம் 16.1	சாசனம் 16.1; 16.2		கொள்கை 8	பத்தி 223

[1]Safe and Legal Abortion is a Woman's Human Right, Briefng Paper, Center for Reproductive Rights, 2004

ஒரு பெண் சுதந்திரமாக
முடிவெடுக்கும்
உரிமையானது ....

ஒரு குழந்தையை
பெற்றுக்கொள்ளலாமா?
அல்லது கர்ப்பத்தை
கலைத்துவிடலாமா ....

என்பவை அனைத்தும்
ஒரு பெண்ணின் தனிப்பட்ட
விஷயமாகும்.

ஆகஸ்ட் 2017, உச்சநீதிமன்றம, இந்தியா

நிகழ்வு • கர்ப்பங்கள் • கணக்கெடுப்பு
கர்பங்களின் விவரம் • விருப்ப
மில்லாத • திட்டமிடாத • வழிமுறைகள்
மருந்து • சிறந்தது • கணக்கெடுப்பு
மதிப்பீடு • கருத்தடை • கணக்கெடுப்பு
வழிமுறைகள் • நிகழ்வு • ஆராய்ச்சி
தகவல்கள் • மதிப்பீடு • விகிதம்
பரிந்துரைகள் • நிகழ்வு • கர்ப்பங்கள்
விருப்பமில்லாத **கருக்கலைப்பு +**
கருத்தடை முறைகள் **சம்பவங்கள்**
வழிமுறைகள் • திட்டமிடாத • மருந்து
தகவல்கள் • சிறந்தது • கணக்கெடுப்பு
சம்பவங்கள் • ஆராய்ச்சி • மதிப்பீடு
விகிதம் • பரிந்துரைகள் • நிகழ்வு
கர்ப்பங்கள் • திட்டமிடாத
விருப்பமில்லாத • கர்ப்பங்கள்
விகிதம் • மருந்து • சிறந்தது
கருத்தடை • நிகழ்வு

கருக்கலைப்பு + சம்பவங்கள்

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் எத்தனை கருக்கலைப்புகள் நிகழ்கின்றது என்பது குறித்த நம்பத்தகுந்த புள்ளி விவரங்கள் ஏதும் இல்லை. குட்மச்சர் (Guttmacher) என்ற நிறுவனம், சமீபத்தில் நம் நாட்டில் நிகழும் கருக்கலைப்புகள் மற்றும் திட்டமிடாத கர்ப்பத்தின் எண்ணிக்கையை கணக்கிடுவதற்கு ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டது.

அவ்வாய்வின் முக்கிய முடிவுகள்[1]

இந்தியாவில் 2015ஆம் ஆண்டு நிகழ்ந்த மொத்த கர்ப்பங்களின் எண்ணிக்கை **4.81 கோடி**

மேலும் 15-49 வயதுடைய 1000 பெண்களில் சராசரியாக **145 பேர்** அந்த ஆண்டு கர்ப்பமடைந்துள்ளார்கள் எனவும் அவ்வாய்வு தெரிவிக்கிறது.


இந்த 145 கர்ப்பங்களில் (1000 பெண்களில்)

70 கர்ப்பங்கள் திட்டமிடாத கர்ப்பங்கள் ஆகும்.

[1] Singh et al., “The incidence of abortion and unintended pregnancy in India 2015”, Lancet Global Health, Volume 6, Issue 1, 2018

இந்தியாவில், 2015ஆம் ஆண்டு நிகழ்ந்த 4.81 கோடி கர்ப்பங்களில் சுமார் 1.56 கோடி கருக்கலைப்பில் முடிந்துள்ளது. இனப்பெருக்க வயதில் உள்ள 1000 பெண்களில் 47 பெண்கள் கருக்கலைப்பு செய்து கொண்டுள்ளனர் என அவ்வாய்வு தெரிவிக்கிறது. 'குட்மச்சர்' நிறுவனத்தின் கணக்கின்படி இந்தியாவில் ஓராண்டில் நிகழும் கருக்கலைப்புகளின் எண்ணிக்கையானது, அரசு தரப்பில் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தை விட சுமார் ஐந்து மடங்கு அதிகமாகும்.


1.56 கோடி
கருக்கலைப்புகள் நிகழ்கிறது



அதில் 8 லட்சம் (5%)

கருக்கலைப்புகள் பாதுகாப்பில்லாதவை எனத்தெரிகிறது. அதாவது பயிற்சி பெறாத மருத்துவர்கள், அங்கீகரிக்கப்படாத மருத்துவர்கள் மற்றும் பதிவு செய்யப்படாத மருத்துவ மையங்களின் மூலமாக இக்கருக்கலைப்புகள் நடந்துள்ளது

கருக்கலைப்பு எந்த வழிமுறையில் செய்யப் பட்டது



12.7 கோடி
(81%)
கருக்கலைப்புகள்

22 இலட்சம்
(14%)
கருக்கலைப்புகள்

8 இலட்சம்
(5 %)
கருக்கலைப்புகள்

அவ்வாய்வின் முக்கிய முடிவுகள்




இனப்பெருக்க வயதிலுள்ள 1000 பெண்களில் ஓராண்டில் திட்டமிடாத கர்ப்பங்களை எதிர்கொண்டவர்கள் எண்ணிக்கை



கிட்டதட்ட சமமாக உள்ளது



கருத்தடை முறைகள் தேவைப்படுவோரில் கருத்தடை சாதனங்கள் கிடைக்காதர்களின் எண்ணிக்கையும்









இந்தியாவில் உள்ள திருமணமான பெண்களில் கருத்தடை முறைகள் தேவைப்படுவோரில் அச்சாதனங்கள் கிடைக்காதவர்கள்

13%


மேலும்

6%

பெண்கள் அதிக அளவு தோல்வியடைய வாய்ப்புள்ள இயற்கை முறைகளை உபயோகித்துள்ளனர்.

பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பில்லாத கருக்கலைப்பு - ஓர் ஒப்பீடு

கருக்கலைப்பு நடந்த இடங்கள்:



கருக்கலைப்பு + சம்பவங்கள்

இந்த ஆய்வானது 2015 ஆம் ஆண்டில் மருத்துவ மையங்கள் மற்றும் மையத்திற்கு வெளியே நடந்த கருக்கலைப்புகளையும் சேர்த்துக் கணக்கிட்டுள்ளது. அதுபோலவே மருந்து மாத்திரைகள் மற்றும் இதர வழி முறைகள் மூலம் செய்யப்படும் கருக்கலைப்புகளையும் கணக்கில் கொண்டுள்ளது.

ஆய்வின் வழிமுறைகள்

உயிரோடு பிறந்த குழந்தைகளின் விவரங்கள் மற்றும் இனப்பெருக்க வயதில் (15-49 வயது வரை) உள்ள மொத்த பெண்களின் எண்ணிக்கை முதலியவற்றை ஐக்கிய நாடுகளின் மக்கள்தொகை குறித்த தரவுகளின் அடிப்படையில் கணக்கிட்டுள்ளது.

திட்டமிடாத கர்ப்பங்களின் விளைவாக நிகழ்ந்த திட்டமிடாத குழந்தை பிறப்புகள் மற்றும் கருத்தடை முறைகளின் உபயோகம் குறித்த புள்ளிவிவரங்கள் தேசிய குடும்பநல ஆய்வுத் (2015-16) தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.


‘மைசோபுரோஸ்டோல்’ என்ற ஒரு மாத்திரையை மட்டும் பயன்படுத்தி கருக்கலைப்பு செய்துகொண்டவர்களின் விவரங்களை இவ்வாய்வின் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஏனெனில், இம் மருந்து கருக்கலைப் பிற்கு மட்டுமல்லாமல் வேறு சில பிரச்சனைகளுக்கும் பயன்படுத்தப் படுவதால், இதை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

குறைபாடுகள்


சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்நோயாளிகளுக்கான சேவை வழங்கும் மருத்துவ மையங்களில் மட்டும் இவ்வாய்விற்கான தகவல்கள் திரட்டப்பட்டது. வெளி நோயாளியாக சேவை வழங்கும் (ஆலோசனை அறைகள் மட்டும் கொண்ட) தனியார் மருத்துவர்களின் சேவையை இவ்வாய்வில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அவர்களில் சிலர் மாத்திரைகள் மூலம் செய்யப்படும் கருக்கலைப்பு சேவையை வழங்கக்கூடும்.

கருக்கலைப்பு சம்பவங்கள் குறித்த ஆதாரங்கள்

நேரடி வழிமுறை



[2]The 2015 Health Facilities Survey (HFS), felded from March to August, 2015, collected data on the number of induced abortions provided annually, by type of procedure (surgical and medication), from 4001 public and private health facilities in Assam, Bihar, Gujarat, Madhya Pradesh, Tamil Nadu, and Uttar Pradesh


சேவை மையத்தற்கு வெளியில் நிகழும் கருக்கலைப்புகள்
மருந்துகளை பயன்படுத்துதல்
இந்திய மருந்து சங்கத்தின் புள்ளிவிவரங் களிலிருந்தும் மருந்து விற்பனையில் கிடைக்கும் லாபம் மற்றும் லாபமில் லாமல் விநியோகம் செய்யபட்ட மாத்திரை களின் விவரங்கள்
மருந்து மாத்திரைகளைப் பயன்படுத்தாமல் கருக்கலைப்பு செய்து கொண்டவர்கள்
2009 ஆம் ஆண்டு மஹாராஸ்டிரா மற்றும் ராஜஸ்தான்ஆகிய இரண்டு மாநிலங்களில் சமுதாய அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

மறைமுக வழிமுறை

ஆய்வின் பரிந்துரைகள்

1.

கருக்கலைப்பு சேவை மையங்கள் போதிய அடிப்படை வசதிகளுடன் இருத்தல் வேண்டும். குறிப்பாக, இடவசதி மற்றும் போதிய மருத்துவ பணியாளர்கள் இருப்பது அவசியம். ஏனெனில், தரமான கருக்கலைப்பு சேவை வழங்குவதில் இவை பெரும் பங்கு வகிக்கின்றன.

2.

மருந்து கடைக்காரர்கள் மற்றும் முறைசாரா மருந்து விற்பனையாளர்கள் இந்த மாத்திரைகளைப் பற்றிய சரியான தகவல்களை தெரிந்து வைத்திருக்க வேண்டும். மேலும் மாத்திரை எடுத்துக்கொண்ட பின்பு, தொடர்சிகிச்சை தேவைப்பட்டால் அவர்களை எங்கு யாரிடம் பரிந்துரைப்பது என்ற விவரங் களையும் அவர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

3.

பெரும்பான்மையான பெண்கள் மாத்திரைகள் மூலம் செய்யப்படும் கருக்கலைப்பையே தேர்வு செய்கின்றனர். ஆகவே நமது அரசாங்கம் கருக்கலைப்பு மாத்திரைகள் குறித்த சரியான தகவல்கள் மற்றும் தொடர் சிகிச்சை பற்றிய தகவல்களை பெண்களுக்கு வழங்கிட வேண்டும்.

4.

திட்டமிடாத கர்ப்பங்களின் எண்ணிக்கையை தடுக்கும் வகையில் தரமான கருத்தடை சேவைகளை வழங்குவதை மையப்படுத்திய கொள்கைகளையும் திட்டங்களையும் அரசு கொண்டுவர வேண்டும்.

பாலியல் மற்றும் இனப்பெருக்க நல உரிமைகள் • பலதரப்பட்ட குழுக்களின் மைய பிரச்சனை • ஆண்பெண் சமத்துவம் • ஆணாதிக்கம் • பால் • பாலியல் • பாலியல் ஆரோக்கியம் • பாலியல் உரிமைகள் பாலினப் பகுப்பாய்வு • பாலியல் கண்ணோட்டம் • பாலினப் பழக்கவழக்கங்கள் நெருக்கமான உறவு • களங்கப்படுத்துதல் விழிப்புணர்வின்மை • இனப்பெருக்கம் பெண்களின் உரிமைகள் • பாலியல் • பால் ஆண் பெண் சமத்துவம் உரிமைகள் சுகாதாரம்

முக்கிய கருத்துக்கள் + ஆண்-பெண் சமத்துவம் மற்றும் பாலியல்

பால் • பாலியல் மற்றும் இனப்பெருக்க நல உரிமைகள் • நெருக்கமான உறவு • பால் பழக்கவழக்கங்கள் • களங்கப்படுத்துதல் பால் • பாலியல் • பாலியல் ஆரோக்கியம் பாலியல் உரிமைகள் • பாலினப் பகுப்பாய்வு ஆணாதிக்கம் • விழிப்புணர்வின்மை பாலியல் கண்ணோட்டம் • பாலினப் பழக்கவழக்கங்கள் • நெருக்கமான உறவு பெண்களின் பாலியல்

முக்கிய கருத்துக்கள் +

ஆண் - பெண் சமத்துவம் மற்றும் பாலியல்

பாலியல் இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகள் குறித்த பணிகளில் அதிலும் குறிப்பாக கருக்கலைப்பு குறித்து பணி செய்யும் போது அதனோடு தொடர்பான பலதரப்பட்ட காரணிகளின் மையப் புள்ளி எது எனக் கண்டறிவது மிகவும் அவசியமாகிறது. ஆகவே இப் பிரச்சனைகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைத் தீர்க்க முற்படும்போது, அவற்றோடு தொடர்புடைய காரணிகள் ஒவ்வொன்றைப் பற்றியும் தெளிவாக புரிந்துகொள்வது மிகவும் அவசியம். குறிப்பாக ஆண் பெண் சமத்துவம், பாலியல் ஆரோக்கியம் பாலியல் உரிமைகள், இனப்பெருக்க நலன் மற்றும் இனப்பெருக்க உரிமைகள் என்றால் என்ன என்று தெளிவாக அறிந்துகொள்வது முக்கியமாகும். ஆண் பெண் சமத்துவம், பாலியல் ஆகியவற்றிற்கும் பாதுகாப்பான கருக்கலைப்பிற்கும் உள்ள தொடர்புகள் என்ன என்பதையும் இந்த ஆவணம் எடுத்துரைக்கிறது.

பாலினம் (ஆண் பெண் சமத்துவம்):
என்பது ஒரு ஆண் அல்லது ஒரு பெண் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்று சமுதாயமும், கலாச்சாரமும் வரையறுப்பதைக் குறிக்கிறது. இது சமுதாயத்தால் உருவாக்கப்பட்டது. மேலும் இது உயிரியல் ரீதியானது அல்ல.

ஆண் பெண் சமத்துவம் என்பது ஒரு சமூக அமைப்பாக வேலை செய்கிறது.

சமுதாயத்தில் உள்ள தவறான கருத்துக்கள்	ஆண்கள் வலிமையானவர்கள். ஆண்கள் அறிவுப்பூர் வமானவர்கள்.	பெண்கள் வலிமையற்றவர்கள். பெண்கள் உணர்ச்சிவசப் படுகின்றவர்கள்.
பாலினப் பழக்க வழக்கங்கள்	ஆண்களுக்கு என தனிப்பட்ட கருத்துக்கள் இருக்கலாம். அதை அவர்கள் தெரிவிக்கலாம்.	பெண்கள் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடாது
பாலின அடிப்படையில் வேலை பகிர்வு	குடும்பத் தேவைகளுக்கான பணத்தை ஆண்கள் சம்பாதிக்க வேண்டும்.	பெண்கள் வீட்டு வேலைகளை பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் வீட்டிலுள்ள அனைவருக்கும் பணிவிடை செய்ய வேண்டும்.
பாலின அடிப்படையில் பணிகளை ஒதுக்குவது	பணம் சம்பாதிக்கும் பணிகள், சம்பளம் பெறும் வேலைகளை ஆண்கள்தான் செய்ய வேண்டும்.	குழந்தை பெறுதல், குழந்தைகளைப் பராமரித்தல் மற்றும் பேணிக்காத்தல் போன்ற பணிகளை பெண்கள்தான் செய்ய வேண்டும்.
பல்வேறு தளங்களில் பொறுப்புகள் மற்றும் செயல்பாடுகள்	ஆண்களின் பணிகள் மற்றும் பொறுப்புகள் அனைத்தும் பொது இடங்களில் உள்ளது.	பெண்களின் பணிகள் மற்றும் பொறுப்புகள் அனைத்தும் தனி இடங்களில் / வீடுகளில் உள்ளது.

இப் பிரச்சனைகளைத் தீர்க்க முற்படும்பொழுது மற்றும் இது குறித்து பணி செய்யும் பொழுதும் ஒரு சில சொற்களின் பொருள் என்ன என்பதை நன்கு தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். குறிப்பாக,

ஆணாதிக்கம், ஆண்-பெண் சமத்துவம், பாலியல், பாலியல் ஆரோக்கியம் மற்றும் உரிமைகள், இனப்பெருக்க நலன் மற்றும் இனப்பெருக்க உரிமைகள் என்றால் என்ன என்பது பற்றி தெளிவாக தெரிந்திருக்க வேண்டும்.

பாலினப் பகுப்பாய்வு

என்பது ஒரு சமூகப் பகுப்பாய்வாகும். ஒரு குறிப்பிட்ட சமூக பொருளாதார சூழலில் வாழும் ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள வசதி வாய்ப்புகள், அவர்களின் நடவடிக்கைகள், திறன்கள் மற்றும் கட்டுப்பாடுகள் போன்றவை பாலின அடிப்படையில் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை குறிக்கிறது.

ஆணாதிக்கம்

என்பது நம் நாட்டில் தொன்றுதொட்டு இருந்துவரும் ஆண் பெண் அதிகார உறவுமுறையைக் குறிக்கிறது. இதுவே, பாலின சமத்துவமின்மைக்கு முக்கிய காரணமாகும். கலாச்சார பழக்கங்கள் ஆண்களை சமுதாயத்தில் அதிக வலிமை மிக்கவர்களாக சித்தரிக்கிறது. இதனால், அதிக வருமானம் மற்றும் சலுகைகளைப் பெறுவதற்கு தகுதியுள்ளவர்களாக ஆண்கள் உள்ளனர். அதே வேளையில், பெண்களுக்கு வீட்டு வேலைகள் மற்றும் குடும்ப பராமரிப்புப் பணிகள் உரித்தானது என்றும் ஆணாதிக்கம் குறிப்பிடுகிறது. ஆணாதிக்கம் என்பது அமைப்பு ரீதியானது. அது பல்வேறு நிலையில் வேலை செய்கிறது. தனிநபர், குடும்பம்[1], சமுதாயம் மற்றும் சமூகம் என பல்வேறு நிலையில் காணப்படுகிறது. அதுபோலவே சுகாதாரம், கல்வி, சட்டம் மற்றும் இதர சேவைகளைப் பெறுவதிலும் ஆணாதிக்கம் நிலவுகிறது.

சட்டரீதியாக

வரலாற்று ரீதியாக

பயிற்சியால் ரீதியாக

பாலியல்:
என்பது பாலுணர்வு, பாலின அடையாளங்கள், பாலினப் பொறுப்புகள், பாலியல் கண்ணோட்டம், உணர்ச்சி, மகிழ்ச்சி, பாலின நெருக்கம் மற்றும் இனப்பெருக்கம், போன்ற பலவற்றை உள்ளடக்கியதாகும். பலதரப்பட்ட நிகழ்வுகளான; ஒருவரின் விருப்பங்கள், நம்பிக்கைகள், கண்ணோட்டங்கள், நடவடிக்கைகள், பழக்கவழக்கங்கள், அனுபவங்கள், பொறுப்புகள் மற்றும் உறவுமுறைகளின் வாயிலாக பாலியலை வெளிப்படுத்தவும், உணரவும் முடிகிறது. பாலியலில் மேற்சொன்ன பல பரிமாணங்கள் இருந்தாலும், எல்லாவற்றையும் எல்லா நேரங்களிலும் நாம் உணர்வதோ அல்லது அனுபவிப்பதோ இல்லை[2]

[1]Barker et al. “Engaging men and boys in changing gender-based inequity in health: Evidence from programme interventions”, World Health Organisation (2007), www.who.int/gender/documents/Engaging_men_boys.pdf
[2] “Defining sexual health, Report of a technical consultation on sexual health, 28–31 January 2002”, World Health Organisation, 2006 www.who.int/reproductivehealth/publications/sexual_health/defining_sexual_health.pdf


மரபுரீதியாக
உளவியல் ரீதியாக
புவியியல் ரீதியாக
அரசியல் ரீதியாக
ஆன்மீகரீதியாக
பாலியல்
மதரீதியாக
கலாச்சாரரீதியாக
உடல்ரீதியாக
பொருளாதார ரீதியாக

முக்கிய கருத்துக்கள் + ஆண் பெண் சமத்துவம் மற்றும் பாலியல்

ஆண்களின் பாலியல் குறித்த தவறான கண்ணோட்டங்கள்



ஆண்கள்தான் உடலுறவு நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றனர்
உடலுறவுக்கு பெண்களை ஆண்கள் கட்டாயப்படுத்தலாம்.



ஒரு பெண்ணிடம் நட்பு உறவை துவங்க ஆண்கள்தான் முதலில் முயற்சி எடுப்பார்கள். ஒருவேளை அந்த பெண் மறுப்புத் தெரிவித்தால் அது அந்த ஆண்மகனுக்கு ஏற்பட்ட அவமானமாக கருதப்படும்.



ஆண்களுக்கு பாலுணர்வு மிகவும் அதிகம்



ஆண்கள் பலருடன் பாலுறவில் ஈடுபடுவர்



விந்து நீர் வெளியேறும்போது உடல் பலவீனமடையும்



ஒரு ஆண் விந்தணுக்களை வீணாக்கக் கூடாது



உடல் வலிமையாக இருப்பதை வெளியே தெரியும்படி காண்பிப்பது சரிதான்



ஆண்கள் வலிமையானவர்கள்; தலைவர்களாக ஆண்கள் உள்ளனர்

பெண்களின் பாலியல் குறித்த தவறான கண்ணோட்டங்கள்





உடலுறவு கொள்வதற்கான
செயல்களை பெண்கள்
ஒருபோதும் ஆரம்பிக்கக்
கூடாது. பாலியல் ஆசைகளை
பெண்கள் வெளியில்
காட்டிக்கொள்ளக் கூடாது



உடலுறவிற்கு ஒரு ஆண்
அழைக்கும் பொழுது ஒரு
பெண் அதற்கு இணங்க
வேண்டும்.





பாலியல் உணர்வுகள்
பெண்களுக்கு
குறைவாகவே உள்ளது.

பெண்ணின் உடல் எளிதில்
சேதமடைந்துவிடும்
ஆகவே உடல் உறுப்புக்கள்
ஏதும் வெளியில்
தெரியாமல் மூடிப்
பாதுகாக்க வேண்டும்





கற்பை பாதுகாத்துக்
கொள்ள பெண்கள்
அடக்கஒடுக்கமாக
இருக்க வேண்டும்

பெண்கள் பலவீனமானவர்கள்
ஆண்கள் எடுக்கும் முழிவுகளை
நடைமுறைப்படுத்துபவர்களாக
பெண்கள் இருக்கின்றனர்.



ஆண்-பெண் சமத்துவம் மற்றும் பாலியல் ஆகியவற்றிற்க்கும், பாதுகாப்பான கருக் கலைப்பிற்கும் உள்ள தொடர்வுகள் என்ன?

1. சொத்து மற்றும் நிதி ஆதாரங்கள் மீது அதிகாரம் செலுத்தும் உரிமை பெண்களுக்கு இல்லாதது.

2. கர்ப்பத்தை தடுப்பதில் ஆண்கள் பொறுப்பெடுத்துக் கொள்ளாதது.

3. பெண்களின் சம்மதமின்றி நடக்கும் உடலுறவு (திருமண மான மற்றும் திருமணமாகாத பெண்களுக்கு).

4. கருத்தடை சாதனங்கள் எளிதில் கிடைக்காதது.

5. கருக்கலைப்பு ஒரு குற்றம் மற்றும் அது களங்கம் என கருதுவது.

6. கருக்கலைப்பு சேவைகளைப் பெறுவதற்காகும் செலவுகள் மற்றும் இளம்பெண்களுக்கு தேவையான கருக்கலைப்பு சேவைகள் கிடைக்காதது.

7. சேவைகள் தரமற்றதாக இருப்பது. சேவைகளைப் பெறுவதற்காகும் செலவுகள்.

8. பாரபட்சமான சேவைகள். கருக்கலைப்பு சேவையை இளம் பெண்கள் நாடும்போது, சேவை வழங்க மறுப்பது மற்றும் குற்றப்படுத்துவது.

9. கருக்கலைப்பு சட்டம் குறித்த விழிப்புணர்வின்மை.

கருக்கலைப்புச் சட்டம் • மகப்பேறு மரணம்
கலைப்பதற்கான காரணங்கள்
மி.ஃபிபிரிஸ்ட்டோன்
மைசோபுரோஸ்டோல் • மாவட்ட குழு
பாலினத் தேர்வு • கருவில் இருக்கும்
குழந்தை ஆணா அல்லது பெண்ணா
என கண்டறியும் **கருக்கலைப்பு +**
தொழில்நுட்பத்தை தடைசெய்யும் • **சட்டம்**
சட்டம் அல்ட்ராசோனோகிராபி • பாலின தேர்வு
கருக்கலைப்பு + பாலியல் பலாத்காரம் பாலியல்
துன்புறுத்தல்களிலிருந்து குழந்தைகளை
பாதுகாக்கும் சட்டம் • கருக்கலைப்புச் சட்டம்
மகப்பேறு மரணம் • கலைப்பதற்கான
காரணங்கள் நிபந்தனைகள்
மி.ஃபிபிரிஸ்ட்டோன் • குழு பாலினத் தேர்வு
அல்ட்ராசோனோகிராபி கலைப்பதற்கான
காரணங்கள்

கருக்கலைப்பு + சட்டம்

இந்தியாவில், 1971 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கருக்கலைப்பு சட்டத்தின் நோக்கமானது



கருக்கலைப்பிற்கு சட்டரீதியாக அனுமதி கொடுப்பதன் மூலம், பாதுகாப்பற்ற கருக்கலைப்பினால் ஏற்படும் உடல்நலப் பாதிப்புகளை குறைப்பது மற்றும், அதிக அளவில் நிகழும் மகப்பேறு மரணங்களை தடுப்பதாகும்.

பாதுகாப்பான கருக்கலைப்பு சேவையை பெறுவதற்கு வழிவகுக்கிறது இந்திய தண்டனைச் சட்டம் (1860) விதி 312-316 படி கருக்கலைப்பு செய்யும் மருத்துவர்கள் தண்டிக்கப்படுவதிலிருந்து, விலக்கு வழங்கி மருத்துவப் பணியாளர்களை இச்சட்டம் பாதுகாக்கிறது.

கருக்கலைப்பு செய்துகொள்வது பெண்களின் உரிமை என இச்சட்டத்தில் தெரிவிக்கப் படவில்லை. ஆனால் எந்த காரணங்களுக்காக பாதுகாப்பான கருக்கலைப்பு சேவையை ஒரு பெண் நாடலாம் என்று தெரிவிக்கிறது.

சட்டப்படி என்னென்ன காரணங்களுக்காக கருக்கலைப்பு செய்து கொள்ள அனுமதிக் கப்படுகிறது?

கர்ப்பத்தை தொடர்ந்தால் பெண்ணின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் அல்லது அவருடைய உடல் அல்லது மன நலனுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படக்கூடும் என்றால்

பாலியல் பலாத்காரத்தின் விளைவாக ஏற்பட்ட கர்பம் (இது அப் பெண்ணின் மன நலனில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் என கருதப்படுவதால்)

கரு வளரும்போதே உடல் மற்றும் மன ரீதியான குறைபாடுகள் இருப்பது தெரியவந்தால் அல்லது கரு வளர்ந்து அங்கக் குறைபாடு களுடன் கூடிய குழந்தையாக அது பிறக்கக் கூடும் என்ற நிலையிலிருந்தால்

திருமணமான பெண்ணோ அல்லது அவளுடைய கணவரோ கருத்தடை சாதனத்தைப் பயன்படுத்திய போதும், அது தோல்வி யடைந்து அதன் விளைவாக கர்ப்பம் தரிக்க நேரிட்டால். (இது அப்பெண்ணின் மன நலனில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் என்று

எத்தனை வாரங்கள் வரையிலான கர்ப்பத்தைக் கலைக்கலாம். மேலும் யார்யார் கருக்கலைப்பு சேவையை வழங்கலாம்?

தற்போது 2021 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்ட திருத்தத்தின்படி (தற்போது விதிமுறைகளை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது) 20 வாரங்கள் வரையிலான கருவை கருக்கலைப்பு செய்யலாம். பயிற்சியும் அரசு அனுமதியும் பெற்ற ஒரு மருத்துவர் கருக்கலைப்பு செய்யலாம்.

20-24 வாரங்கள் ஆன கரு எனில் கருக்கலைப்பு சேவை வழங்குவதற்கான பயிற்சியும் அரசு அனுமதியும் பெற்ற இரண்டு மருத்துவர்களின் ஒப்புதலுடன்தான் கருக்கலைப்பு செய்ய வேண்டும்.
24 வாரங்கள் ஆனபிறகும் கருவின் வளர்ச்சியில் குறைபாடு இருப்பின் கருக்கலைப்பு செய்யலாம். அதற்கு மாநில அளவிலான மருத்துவக் குழுவின் பரிந்துரையைப் பெறவேண்டும்.

எங்கு கருக்கலைப்பு செய்து கொள்ளலாம்?

அரசால் அங்கீகரிக்கப்பட்ட கருக்கலைப்பு சேவை மையங்களில் செய்துகொள்ளலாம்.

கருக்கலைப்பு சட்டத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள்

2002 மாத்திரைகள் மூலம் கருக்கலைப்பு செய்துகொள்வதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மிஃபிபிரிஸ்ட்டோன் மற்றும் மைசோபுரோஸ்டோல் ஆகிய இரண்டு மாத்திரைகளை ஆரம்பகால கருக்கலைப்பிற்கு[1] பயன்படுத்த அங்கீகாரம் கொடுக்கப் பட்டுள்ளது.

2003 கருக்கலைப்பு மையங்களுக்கு அனுமதி வழங்கும் வழிமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டது. மாநில அளவிலான அமைப்புக்குப் பதிலாக மாவட்ட அளவில் அனுமதியளிக்கும் அமைப்புகள் உருவாக் கப்பட்டது. 3-5 நபர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டது. இதன் தலைவர் மாவட்ட அரசு தலைமை மருத்துவ அதிகாரியாவார். இதன்மூலம் கருக்கலைப்பு சேவை வழங்கும் மையங்களின் எண்ணிக்கை அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் கருக்கலைப்பு சேவைகள் பெண்களுக்கு எளிதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

கருக்கலைப்பு மாத்திரையை, பட்டியலில் இணை மாத்திரைகள் வரிசையில் சேர்க்கப்பட்டது. அரசு அங்கீகாரம் பெற்ற கருக்கலைப்பு சேவை வழங்கும் மருத்துவர்கள், கருக்கலைப்பு மாத்திரையை பரிந்துரை செய்யலாம். அவர் பணிபுரியும் மையத்தில் ஒரு பெண் தங்கி சிகிச்சை பெறும் வசதி இல்லை யென்றாலும் கருக்கலைப்பு மாத்திரைகளை பரிந்துரைக்கலாம். ஆனால் அவசர நிலையில் ஒரு பெண் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் அவரை ஏதேனும் ஒரு மையத்திற்குப் பரிந்துரைக்கும் வகையில் அம்மருத்துவருக்கு தொடர்பு இருக்க வேண்டும்[2].

மாவட்ட குழுவின் பணிகள் கருக்கலைப்புச் சேவையை வழங்க மனு செய்துள்ள மருத்துவ மனைகளின் விண்ணப்பங்களை மாவட்டக் குழு பரிசீலனை செய்யும். பெறப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில், இக்குழு சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளுக்கு நேரில் சென்று அங்குள்ள வசதிகள், மருத்துவப் பணியாளர்களின் தகுதிகளை ஆய்வு செய்யும். களஆய்வின் அடிப்படையில் அரசுக்கு அக்குழு இந்த பரிந்துரைகளை வழங்கும். அதன்பின் கருகலைப்பு சேவை வழங்க அம்மையத்திற்கு அரசு அனுமதிச் சான்றிதழ் வழங்குகிறது.

[1] The Medical Termination of Pregnancy Rules: Amendment, Government of India, New Delhi, India, 2003

[2] Stillman M. et al., "Abortion in India: A Literature Review", Guttmacher Institute, New York, 2014

கருக்கலைப்பு செய்துகொள்வதற்கு சம்பந்தப்பட்ட பெண்ணின் ஒப்புதல் மட்டுமே போதுமானது. கணவரின் ஒப்புதல் தேவையில்லை



2021 20 வாரங்களுக்குட்பட்ட கர்ப்பம் எனில் கருக்கலைப்பு செய்வதற்கான பயிற்சியும் அரசு அனுமதியும் பெற்ற ஓர் மருத்துவர் கருக்கலைப்பு செய்யலாம்.

20-24 வாரங்கள் ஆன கரு எனில் கருக்கலைப்பு சேவை வழங்குவதற்கான பயிற்சியும் அரசு அனுமதியும் பெற்ற இரண்டு மருத்துவர்களின் ஒப்புதலுடன்தான் கருக்கலைப்பு செய்ய வேண்டும். கருவின் வளர்ச்சியில் குறைபாடு இருப்பின் 24 வாரங்கள் ஆனபிறகும் கருக்கலைப்பு செய்யலாம் அதற்கு மாநில அளவிலான மருத்துவக் குழுவின் பரிந்துரையை பெற வேண்டும். (தற்போது விதிமுறைகளை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது)

மாவட்ட குழுவின் உறுப்பினர்களாக யார்யாரெல்லாம் உள்ளனர்?

1. தலைவர் (மாவட்ட அரசு தலைமை மருத்துவ அதிகாரி / மாவட்ட அரசு சுகாதார அதிகாரி)
2. மகப்பேறு மருத்துவர் / அறுவைசிகிச்சை நிபுணர் / மயக்க மருந்து நிபுணர்.
3. அப்பகுதியில் உள்ள மருத்துவர்.
4. தன்னார்வத் தொண்டு நிறுவனப் பிரதிநிதி ஒருவர்
5. உள்ளாட்சி அமைப்பின் (பஞ்சாயத் ராஜ்) உறுப்பினர்.

* இக்குழுவில் குறைந்தபட்சம் ஒரு பெண்ணாவது உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

கருவுறுதலுக்கு முன்பு மற்றும் கர்ப்பத்தில் இருக்கும் கரு ஆணா அல்லது பெண்ணா எனக் கண்டறிய பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்களை முறைப்படுத்தும் சட்டத்தின் நோக்கமானது...
PCPNDT (1994)



கருவின் வளர்ச்சியைக் கண்டறியும் தொழில் நுட்பத்தை, மற்றும் பரம்பரை அல்லது மரபு ரீதியான வளர்ச்சி குறைபாடுகளைக் கண்டறியும் தொழில்நுட்பத்தை நெறிப்படுத்துவதாகும்.
அங்க வளர்ச்சி, குறைபாடுகள், ஹார்மோன்களின் குறைபாடுகள், பிறவிக் குறைபாடு அல்லது பாலினக் குறைபாடுகளைக் கண்டறிவதற்கு மட்டுமே அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.



தாயின் வயிற்றில் வளரும் கரு ஆணா அல்லது பெண்ணா எனக் கண்டறிவதற்கு பயன்படுத்துவதை தடைசெய்யவேண்டும். அப்போதுதான் கடந்த 20 ஆண்டுகளாகத் தொடர்ந்து குறைந்துவரும் குழந்தைகள் மத்தியிலான பாலின விகிதாச்சாரம் (Child Sex Ratio) மற்றும் பிறக்கும் குழந்தைகளின் பாலின விகிதாச்சாரம் (Sex Ratio at Birth) ஆகியவற்றை கட்டுப்படுத்த முடியும்.

சட்டம் என்ன சொல்கிறது?

கருவுறுதலுக்கு முன்னும் பின்னும் நடக்கும் பாலின தேர்வை தடை செய்கிறது.

தொழில்நுட்பத்தைத் தவறாக பயன்படுத்துவதைத் தடை செய்கிறது.

இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத நபர்களுக்கு அல்ட்ராசவுண்ட் கருவி விற்க தடைவிதிக்கிறது.

கர்ப்பத்திலிருக்கும் கருவின் வளர்ச்சியை கண்டறியும் தொழில் நுட்பத்தை முறைப் படுத்துதல். (உதாரணம்: பனிநீரை வெளியே எடுத்து பரிசோதனை செய்தல் மற்றும் அல்ட்ரா சேனாகிராம்). மரபு ரீதியாக ஏற்படும் குறைபாடு களைக் கண்டறிதல். மேலும், இவற்றிற்காக அங்கீகரிக்கப் பட்ட மையங்களை மட்டும் நாடுதல். ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக இந்த சேவையை வழங்கும் தேர்ச்சி பெற்ற மருத்துவரை நாடுதல்.

பாலின தேர்விற்காகப் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம் குறித்த விளம்பரங்களை தடை செய்கிறது.

கருக்கலைப்புச் சட்டம் மற்றும் கர்ப்பத்தில் இருக்கும் கருவின் வளர்ச்சியைக் கண்டறியும் தொழில்நுட்பம் ஆகியவற்றை மீறுவோருக்கு என்ன தண்டனை வழங்கப்படும் என இதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கருக்கலைப்பு உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் பாலினத் தேர்வைத் தடுத்தல்

இவற்றிற்கு இடையே உள்ள தொடர்பைப் புரிந்துகொள்ளுதல்

பாலின தேர்விற்காக பயன்படுத்தும் தொழில் நுட்பங்களை நெறிப்படுத்தவும் அவற்றை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கும் சட்டங்கள் உருவாக்கப் பட்டுள்ளது. ஆனால், எதிர்பாராத விதமாக இச்சட்டம் பாதுகாப்பான கருக்கலைப்பு சேவையை வழங்குவதில் சில பாதிப்புகளை ஏற்படுத்திவருகிறது. பாலின தேர்வு என்பது பாகுபாட்டின் அடிப்படையில் பெண்களை தொடர்ந்து புறக்கணிப்பதன் ஒரு வெளிபாடுதான். இது பிறப்பிற்கும் முன். பின்பு என்றில்லாமல் வாழ்வின் எல்லா நிலைகளிலும் இந்த பாகுபாடு காணப்படுகிறது. எனவே பாலின ஏற்றத்தாழ்வுகளை களைய நாம் பாடுபடவேண்டும். ஆண்-பெண் சமத்துவம் பாலியல் இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகளுக்காக பாடுபடுபவர்கள் தற்பொழுது சந்திக்கும் முக்கிய சவால்கள் என்னவென்றால். அவர்கள் ஒருபுறம் பாலின தேர்விற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டியுள்ளது. மறுபுறம் பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகளை ஏன் நாட முடிவதில்லை என்பது பற்றியும் பேச வேண்டியுள்ளது. பாதுகாப்பான கருக்கலைப்பு சேவையை பெறுவது என்பது ஒரு பெண்ணின் பாலியல் மற்றும் இனப்பெருக்க உரிமையாகும். அதன்படி ஒரு பெண் அவளது உடல் மற்றும் வாழ்க்கை குறித்து சுய மாண்புடன் முடிவுகள் எடுக்கும் உரிமை அவளுக்கு உள்ளது என்பதையும் குறிக்கிறது.

பாலின விருப்பு வெறுப்புடன் ஆண்-பெண் குழந்தைகளைத் தேர்வு செய்யும் நடைமுறையானது இந்தியாவில் தொன்றுதொட்டு நடைமுறையிலுள்ளது. இது ஆணாதிக்க நடைமுறையின் வெளிப்பாடு. பெண்ணியக் குழுக்களின் பிரச்சார யுக்தியிலிருந்து ஒரு முக்கிய விஷயம் தொரிய வருகிறது. அதாவது இவ்விரண்டு சட்டத்திலும் உள்ள முக்கிய விஷயங்கள் மற்றும் கருத்தை முதலில் ஆராய வேண்டும். அதன் அடிப்படையில் ஒரு ஒருமித்த நிலையை உருவாக்க வேண்டும் மேலும் இதில் உள்ள பொதுவான விஷயங்களை பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றியும் தொடர்புபடுத்தி பார்க்க வேண்டியுள்ளது

பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (POSCO ACT) 2012 என்பது:

பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் ரீதியிலான சுரண்டல்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு என இச்சட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது. 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு நிகழும் அனைத்து வகையான பாலியல் ரீதியிலான குற்றச் செயல்களை புகாராகப் பதிவு செய்ய வேண்டும் என இச்சட்டம் தெரிவிக்கின்றது. 18 வயது பூர்த்தியடையாத ஒரு கர்ப்பிணிப் பெண், மருத்துவ சேவையை நாடினால், உடனே அம்மருத்துவர், அப்பெண்ணுக்கு பாலியல் வன்முறை நடந்துள்ளது என பேலீசில் புகார் கொடுக்கவேண்டும் என இச்சட்டம் தெரிவிக்கிறது.

18 வயது பூர்த்தியாகாத ஒரு பெண்ணுக்கு கருக்கலைப்பு சேவை தேவைப்பட்டால், அவளுடைய பாதுகாவலரின் ஒப்புதலின் பெயரில்தான் சேவை வழங்க வேண்டும். மேலும் கருக்கலைப்பு சட்டத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றவேண்டும்.



கருக்கலைப்பு சட்டத்தின் படி கருக்கலைப்பு சேவையை நாடுபவர்களின் தனிப்பட்ட அடையாளங்களை மருத்துவர்கள் பாதுகாக்க வேண்டும் எனத் தெரிவிக்கிறது. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டமானது 18 வயதிற்கு உட்பட்டவர்கள் கருக்கலைப்பு சேவையை நாடினால் அதை புகாராக பதிவு செய்யும்படி தெரிவிக்கிறது. இதனால், இவ்விரண்டு சட்ட சரத்துகளுக்கிடையே ஒரு முரண்பாடு காணப்படுகிறது. அதனால் வளரிளம் பருவ பெண்கள் அங்கீகரிக்கப்படாத மற்றும் பாதுகாப்பில்லாத கருக்கலைப்பு சேவைகளை நாடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பயிற்சி பெற்ற மருத்துவர்களிடம் சென்றால் அது புகாராக மாறி தங்களின் எதிர்காலமே பாழாகிவிடுமோ என்ற பயம் நிலவுகிறது.

பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் ஒரு நல்ல நோக்கத்திற்காக கொண்டுவரப்பட்டாலும், பாதுகாப்பான கருக்கலைப்பு சேவையை பெறுவதில் ஒரு பெரிய தடையாகவே உள்ளது.

தவறான கருத்துக்கள் • மகப்பேறு மரணங்கள் • மாத்திரைகள் மூலமாக கருக்கலைப்பு • கருத்தடை முறைகள் அவசரகால கருத்தடை மாத்திரைகள் மூடநம்பிக்கை • உண்மை • தடைகள் கரு • சட்டம் • விழிப்புணர்வு • தகவல்கள் தவறான கருத்துக்கள் • மகப்பேறு மரணங்கள் • மாத்திரைகள் மூலமாக கருக்கலைப்பு • கருத்தடை முறைகள் அவசரகால கருத்தடை மாத்திரைகள்

கருக்கலைப்பு + மூடநம்பிக்கைகள்

தவறான கருத்துக்கள் • உண்மை சட்டம் • கரு • விழிப்புணர்வு • தடைகள் தகவல்கள் • தவறான கருத்துக்கள் மகப்பேறு மரணங்கள் • மாத்திரைகள் மூலமாக கருக்கலைப்பு • கருத்தடை முறைகள் • அவசரகால கருத்தடை மாத்திரைகள் • உண்மை • தடைகள் கரு • சட்டம் • விழிப்புணர்வு • தகவல்கள் மூடநம்பிக்கை • உண்மை • தவறான கருத்துக்கள் • கரு

கருக்கலைப்பு + மூடநம்பிக்கை

இந்தியாவில் கருக்கலைப்பு செய்துகொள்வதற்கு சட்டப்படி அனுமதிக்கப்படுகிறது என்றபோதிலும், அச்சேவையை நாடுவதில் இன்னும் பல தடைகள் உள்ளன. கருக்கலைப்பு குறித்து சமூகத்தில் நிலவும் தவறான கருத்துக்களும் மூட நம்பிக்கைகளும் ஒரு முக்கிய தடையாக உள்ளது.

சட்டம் குறித்த மூடநம்பிக்கைகள்: சட்டம்

மூடநம்பிக்கைகள்

கருக்கலைப்பு என்பது சட்டப்படி குற்றம் என்ற கருத்து நிலவுகிறது.

அறிவியல் பூர்வமான உண்மை

20 வாரங்கள் பூர்த்தியடையாத ஒரு கருவை கலைப்பதற்கு ஒரு மருத்துவரின் ஆலோசனையின்படி கருக்கலைப்பு செய்துகொள்ளலாம். 20-24 வாரங்கள் ஆன கருவை இரண்டு மருத்துவர்களின் ஆலோசனையைப் பெற்றுதான் கருக்கலைப்பு செய்துகொள்ளவேண்டும். கருக்கலைப்பு சட்டத்தின்படி பின்வரும் காரணங்களுக்காக கருக்கலைப்பு செய்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. 1) ஒரு பெண்ணின் உயிருக்கு ஆபத்து. 2) பாலியல் பலாத்காரத்தின் விளைவாக ஏற்பட்ட கர்ப்பம் எனில். 3) அப்பெண்ணின் உடல் மற்றும் மனநலனில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கருதினால். 4) கருவின் வளர்ச்சியில் குறைபாடுகள். 5) திருமணமான ஒரு பெண்ணோ அல்லது அவளுடைய கணவரோ கருத்தடை சாதனத்தை பயன்படுத்தி அது தோல்வியடைந்து கருவுற நேரிட்டால், (கருக்கலைப்பு செய்துகொள்வதற்கான முக்கிய காரணங்கள் குறித்த விரிவான தகவல்களுக்கு கருக்கலைப்பு + சட்டம் என்ற பகுதியை பார்க்கவும்).

மூடநம்பிக்கைகள்

பாதுகாப்பான கருக்கலைப்பிற்கு சட்டப்படி அனுமதியுண்டு.

அறிவியல் பூர்வமான உண்மை

சட்டப்படி கருக்கலைப்பு சேவை வழங்குவதற்கு மருத்துவர்களும் மருத்துவமனைகளும் பதிவு செய்யப்படவேண்டும். மேலும் பதிவு செய்யப் படுவதால் மட்டும் கருக்கலைப்பு சேவைகள் பாதுகாப்பானதாகாது. கருக்கலைப்பு சேவைகள் வழிமுறைகளுடன் தரமானதாகவும் இருக்க வேண்டும்.

ஒரு திருமணமான பெண் கருக்கலைப்பு செய்து கொள்வதற்கு அவளுடைய கணவரின் ஒப்புதல் தேவையில்லை. சமீபத்திய 2021 சட்டத்திருத்தத்தின்படி 'திருமணமான பெண்' என்ற சொல் நீக்கப்பட்டுள்ளது. திருமணமான, திருமணமாகாத, தனியாக வாழும் பெண்கள் இச் சேவையைப் பெறலாம்.

18 வயது பூர்த்தியாகாத பெண் மற்றும் மனநலன் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கருக்கலைப்பு சேவை தேவைப்பட்டால் அ;வளுடைய பாதுகாவலருடைய ஒப்புதலின் பேரில்தான் சேவை வழங்கப்படவேண்டும். 18 வயது பூரத்தியடைந்த பெண்கள் கருக்கலைப்பு செய்துகொள்வதற்கு கணவர் அல்லது குடும்ப உறுப்பினர்களின் ஒப்புதல் சட்டத்தின்படி தேவையில்லை. இதனை 2011 ஆம் ஆண்டு பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது. மேலும் 2017ஆம் ஆண்டு உச்சநீதிமன்றமும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளது.



திருமண உறவில் வாழும் ஒரு பெண் உடலுறவிற்கு சம்மதம் தெரிவித்ததை அவள் கருத்தரித்து குழந்தை பெற்றுக்கொள்ள சம்மதித்ததாக எடுத்துக்கொள்ளக்கூடாது. பெண் என்பவள் ஒரு இயந்திரம் அல்ல, அதில் மூலப்பொருட்களைப் போட்டுவிட்டு, ஒரு முழுமை பெற்ற பொருள் வெளியே வரவேண்டும் என எதிர்பார்ப்பதற்கு, ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க மனதளவில் அவள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

- பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்ற தீர்ப்பு -2011




மருத்துவம் குறித்த மூடநம்பிக்கைகள்:


மூடநம்பிக்கைகள்

கருக்கலைப்பு என்பது ஆபத்தானது அல்லது அது நீண்டகால ஆரோக்கிய பாதிப்புகளை ஏற்படுத்தும்.

ஒவ்வொருவரும் கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்தினால் கருக்கலைப்பு சேவை யாருக்கும் தேவைப்படாது

அவசரகால கருத்தடை மாத்திரை உட்கொள்ளுவதும், கருக்கலைப்பு செய்துகொள்வதும் ஒன்றுதான்





அறிவியல் பூர்வமான உண்மை

மருத்துவ முறைகளின்படி பாதுகபாப்பான கருக்கலைப்பு செய்துகொள்வதினால் எதிர்காலத்தில் நிகழும் கர்ப்பங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. கருக்கலைப்பு செய்துகொண்ட பிறகு ஒரு சதவீதத்திற்கும் குறைவான பெண்களுக்கு தொற்றுக்களின் தாக்கம் ஏற்படுகிறது அல்லது அதிகப்படியான உதிரப்போக்கு ஏற்படுகிறது.

எந்த ஒரு கருத்தடை சாதனமும் 100% சிறந்ததல்ல. கருத்தடை சாதனங்கள் பயன்படுத்தும்போது தோல்வி ஏற்பட்டு கருவுருதல் நிகழலாம். ஆணுறைகள் / பெண்ணுறைகள் கிழிந்துவிடக்கூடும், கருத்தடை மாத்திரைகளை உட்கொள்ள ஒருவர் மறந்து போயிருக்கலாம். விரிவான பாலியல் மற்றும் இனப்பெருக்க நல சேவையின்கீழ் ஒரு முக்கிய அங்கமாக கருக்கலைப்பு சேவை உள்ளது.

அவசரகால கருத்தடை மாத்திரை பாதுகாப்பற்ற உடலுறவிற்குப் பின் 72 மணி நேரத்திற்குள் எடுத்துக்கொள்ளும் மாத்திரையாகும். இந்த மாத்திரை கரு உருவாவதைத் தவிர்க்கும். கருவை கலைக்காது மாறாக கருக்கலைப்பு மாத்திரை என்பது கருத்தரித்தல் நிகழ்ந்த பிறகு கருக்கலைப்பு செய்ய பயன்படுத்தப்படுகிறது.

சமூகம் சார்ந்த மூடநம்பிக்கைகள்:

மூடநம்பிக்கைகள்

இளம் வயதினருக்கு பாலியல் மற்றும் கருக்கலைப்பு குறித்த விஷயங்களை சொல்லிக் கொடுத்தால், உடலுறவில் ஈடுபடுவதற்கு அவர்களை ஊக்குவிப்பது போல அமைந்துவிடும். மேலும் பலருடன் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடவும் வழிவகுத்துவிடும்.

உண்மை

விரிவான பாலியல் கல்வி, கருத்தடை முறைகள் மற்றும் கருக்கலைப்பு பற்றிய தகவல்களை முறையாக இளம் வயதினருக்கு வழங்குவதன் மூலம் பாலியல் மற்றும் இனப்பெருக்க நல விஷயங்களை முழுமையாக தெரிந்து கொண்டு ஆரோக்கியமாகவும் அதேநேரம் சிந்தித்து தெளிவான ஒரு முடிவெடுக்க வழிவகை செய்கிறது என்று பல ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. மேலும் இந்த தகவல்களை தெரிந்திருப்பதன் மூலம் அவர்கள் பாதுகாப்பான உடலுறவில் ஈடுபடவும், கருத்தடை சாதனங்களை சிறந்த முறையில் பயன்படுத்தவும் உதவுகிறது.

இந்தியாவில் நிகழும் பெரும்பாலான கருக்கலைப்புகள் பாலினத் தேர்வின் அடிப்படையில் நடக்கிறது.

கருவில் இருப்பது ஆணா அல்லது பெண்ணா என்பது மூன்று மாதங்களுக்குப் பிறகே உறுதியாக கண்டறிய முடியும். நம் நாட்டில் நடக்கும் பெரும்பாலான கருக்கலைப்புகள் முதல் மூன்று மாதங்களுக்குள்தான் செய்யப்படுகிறது. அதில், பாலினத் தேர்வுக்கு வாய்ப்புகள் இல்லை.

கருக்கலைப்பு செய்துகொள்ளும் பெண்கள், மிகுந்த மன வருத்தத்திற்கு ஆளாகின்றனர்.

கருக்கலைப்பு செய்துகொண்ட பெண்களில் 96 சதவீதத்தினர் தங்களின் முடிவு சரியானதுதான் என்று கருதுகின்றனர். கருக்கலைப்பிற்கு பிறகு பெண்கள் அதிகப்படியான மனஉளைச்சலுக்கு ஆளாவதில்லை. மேலும், கருக்கலைப்பு செய்துகொள்வதால் குழந்தையின்மை அல்லது மார்பக புற்று நோய் ஏற்படுகிறது என்பதற்கான அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் இல்லை.

References:

[1] Say et al., "Global causes of maternal death: a WHO systematic analysis", Lancet Global Health, 2014

[2] "Report on Medical Certification of Cause of Death", Registrar General of India, 2014

மூடநம்பிக்கை

கருக்கலைபினால் கருவிலேயே ஒரு குழந்தை கொல்லப்படுகிறது மற்றும் இது ஒரு தவறான செயலாகும்.

அறிவியல்பூர்வமான உண்மை

கர்ப்பத்தின் ஆரம்பகாலகட்டத்தில் ஒரு கருவால் தனித்து சுயமாக உயிர்வாழமுடியாது. ஆகவே கருக்கலைப்பை 'கொலை' என்று சொல்வது சரியல்ல மேலும் கருவை ஒருநபருடன் ஒப்பிடக்கூடாது.



கர்ப்பம் • அரசு சுகாதார மையங்கள்
அறுவை சிசிச்சை • மருத்துவமனைகள்
மருத்துவர்கள் • மருந்துச்சீட்டு • தடைகள்
மகப்பேறு மருத்துவர்கள் •
பெண்களுக்கான பிரத்யோக
மருத்துவர்கள் • மகப்பேறு மருத்துவர்
தடைகள் • சட்டம் • கர்பம் • அரசு சுகாதார
மைங்கள்• அறுவை சிசிச்சை • மருத்துவ
மனைகள் • மருத்துவர்கள் • தடைகள்
அறுவை சிசிச்சை • கருக்கலைப்பு +
மருத்துவ மனைகள் • சேவைகள்
மருத்துவர்கள் • மப்பேறு மருத்துவர்கள்
பெண்களுக்கான பிரத்யோக மருத்துவர்
மருந்து சீட்டு • சட்டம் • கர்பம் • அறுவை
சிசிச்சை • அரசு சுகாதார மைங்கள்
மருத்துவர்கள் • சட்டம் • மருந்து சீட்டு
கர்பம் • மகப்பேறு மருத்துவர்
பெண்களுக்கான பிரத்யோக மருத்துவர்
தடைகள் • சட்டம் • அறுவைசிகிச்சை
அரசு மருத்துவமனைகள் • மருத்துவ
மனைகள் • மருத்துவர்கள் • தடைகள்
மருந்து சீட்டு • சட்டம் • மருந்து
அறுவைசிகிச்சை • சேவைகள்

கருக்கலைப்பு + சேவைகள்

கருக்கலைப்பு சேவைகள் 101

யாருக்காக?

பின்வரும் சில குறிப்பிட்ட காரணங்களுக்காக ஒரு பெண் கருக்கலைப்பு சேவையை நாடலாம். உடல் அல்லது மன ரீதியான பாதிப்பிற்கு ஆளாக நேரிடும்போது அல்லது பாலியல் பலாத்காரத்தினால் கருவுற்றிருந்தால் அல்லது கருவின் வளர்ச்சியில் குறைபாடுகள் இருந்தால் அல்லது கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்தியபோது அவை தோல்வியடைந்து கருத்தரித்தல் ஏற்பட்டிருந்தால் அப் பெண்ணின் சம்மதத்தின்பேரில் கருக்கலைப்பு செய்துகொள்ளலாம்.

18 வயது பூர்த்தியடைந்த பெண்கள் கருக்கலைப்பு செய்துகொள்வதற்கு கணவர் / துணைவர் / பெற்றோர் ஆகியோரின் ஒப்புதல் பெறத் தேவையில்லை. 18 வயது பூர்த்தியதடையாதவரகள், பெற்றோர் / பாதுகாவலரின் ஒப்புதலுடன் கருக்கலைப்பு செய்துகொள்ளலாம்.

எப்படி?

மாத்திரைகள் மூலமாகவோ அல்லது சிறிய அறுவை சிகிச்சை மூலமாகவோ கருக்கலைப்பு செய்துகொள்ளலாம்.

எங்கே?

அரசு சுகாதார மையங்கள், மாவட்ட அரசு மருத்துவமனைகள், சமூக சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார மைங்கள். இந்த மையங்களில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் மற்றும் போதிய அடிப்படை மருத்துவ வசதிகள் இருத்தல் அவசியம். அரசு அனுமதி பெற்ற தனியார் மருத்துவமனைகள் அதில் சான்றிதழ்பெற்ற மருத்துவர் மற்றும் அடிப்படை வசதிகள் இருந்தல் வேண்டும்.

எப்பொழுது?

20 வாரங்களுக்குட்பட்ட கருவை கலைப்பதற்கு ஒரு மருத்துவரின் ஆலோசனையே போதுமானது. 20-24 வாரங்களான கருவை கலைப்பதற்கு இரண்டு மருத்துவர்களின் ஆலோசனையுடன் கருக்கலைப்பு செய்யவேண்டும்.

பாதுகாப்பான கருக்கலைப்பு செய்துகொள்வதற்கான வழிமுறைகள்



மாத்திரைகள் மூலம் செய்யப்படும் கருக்கலைப்பு

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களுக்கு மாத்திரைகள் எடுத்துக்கொள்வதன் மூலம் கருக்கலைப்பு செய்யப்படுகிறது.



அறுவை சிகிச்சை மூலமாக கருக்கலைப்பு

இம் முறைக்கு ஒரு நாள் மருத்துவமனையில் தங்க வேண்டியிருக்கலாம். முதலில் முழு உடல் மயக்க மருந்து அல்லது கருப்பை மட்டும் மரத்துப்போகும் படியான மருந்து கொடுக்கப்படுகிறது. அதன்பிறகு, உறிஞ்சு குழாய் என்ற ஒரு உபகரணம் மூலமாக கரு முழுமையாக உறிஞ்சி எடுக்கப்படுகிறது. மற்ற முறைகளை ஒப்பிடும்பொழுது, அறுவை சிகிச்சை முறையில் இது பாதுகாப்பான முறையாகும்.



15 வாரங்களுக்கு மேலான கருவை கருக்கலைப்பு செய்வதற்கு டி&ஈ (D&E) என்ற முறை பயன்படுத்தப் படுகிறது. இந்த முறையில் மருத்துவர், கருப்பையின் வாய்ப்பகுதியை விரிவடையச் செய்து ஒரு விசேஷ கருவியின் உதவியுடன் கருப்பையிலுள்ள கருவை சுரண்டி வெளியே எடுத்துவிடுவார்.

மூடநம்பிக்கை கருக்கலைப்பு செய்துகொள்வதனால் குழந்தையின்மை மற்றும் மார்பகப் புற்றுநோய் ஏற்படுகிறது.

அறிவியல் பூர்வமான உண்மை **மேற்சொன்ன கூற்றிற்கு அறிவியல் ரீதியாக எவ்வித அடிப்படை ஆதாரமும் இல்லை.**

மூடநம்பிக்கை கருக்கலைப்பு ஒரு பெண்ணிற்கு மன உளைச்சலை விளைவிக்கிறது. (அல்லது) கருக்கலைப்பிற்குப் பின் அவருக்கு மனநல பாதிப்புகள் ஏற்படுகிறது.

அறிவியல் பூர்வமான உண்மை **பெண்கள் எவ்வித வற்புறுத்தலும் இன்றி சுயமாக முடிவெடுக்கும்பொழுது மன ரீதியான பாதிப்போ மன உளைச்சலோ ஏற்படுவதில்லை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.**

மூடநம்பிக்கை மாத்திரைகள் மூலம் கருக்கலைப்பு செய்துகொள்ளும்பொழுது மிகுந்த வலி ஏற்படுகிறது.

அறிவியல் பூர்வமான உண்மை **கரு கலைந்து வெளிவரும்போது உதிரப் போக்கும், அடிவயிற்றில் வலியும் ஏற்படுவது இயல்பானது. எனவே அதற்கு வலி நிவாரண மாத்திரைகள் எடுத்துக்கொள்ள பரிந்துரைக் கப்படுகிறது.**


இந்தியாவில் சட்ட மற்றும்
மருத்துவ ரீதியாக
கருக்கலைப்பு
செய்துகொள்வது
பாதுகாப்பானது. இதில்
கவனிக்க வேண்டிய
விஷயம் என்னவென்றால்
ஒரு மருத்துவ
நிபுணரின் ஆலோசனை /
பரிந்துரையின்றி
கருக்கலைப்பு
செய்யக்கூடாது.

கருக்கலைப்பு சேவைகளை வழங்குதல்[1]

மகப்பேறு மருத்துவர், மகளிர் நல மருத்துவர், அரசு அங்கீகாரம் பெற்ற இளநிலை மருத்துவர்கள், கருக்கலைப்பு சேவையை சட்டப்படி வழங்கலாம்.

அரசாங்கம்:
சான்றிதழ் பெற்ற மருத்துவர்களைக் கொண்ட அரசாங்க மருத்துவ மனைகளிலுள்ள மருத்துவர்கள், கருக்கலைப்பு சேவையை வழங்கலாம்

தனியார்:
கருக்கலைப்பு சேவை வழங்குவதற்கு அரசாங் கத்தால் வரையறுக்ப்பட்ட அடிப்படை வசதிகள் மற்றும் பயற்சி பெற்ற மருத்துவர்களைக் கொண்ட பதிவுசெய்யப்பட்ட தனியார் மருத்துவ மனைகள் கருக்கலைப்பு சேவை வழங்க அரசு அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்.

கருக்கலைப்பு சட்டம் 1971

இந்தச் சட்டப்படி பின்வரும் காரணங்களுக்காக கருக்கலைப்பு செய்ய அனுமதிக்கப்படுகிறது. ஒரு பெண்ணின் உயிரைக் காப்பாற்ற, **உடல் மற்றும் மனநலனைக் காக்க**, கருவின் வளர்ச்சியில் குறைபாடுகள் மற்றும் கருத்தடை சாதனங்கள் தோல்வியால்[2] ஒரு பெண் கருத்தரித்தால் கருக்கலைப்பு செய்துகொள்ள அனுமதிக்கப்படுகிறது.

கருக்கலைப்பு சட்டத்தில் 2003 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்டது. அதன்படி, அரசு அங்கீகாரம் பெறாத மருத்துவமனையில் பணிபுரியும் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் மாத்திரைகள் மூலம் செய்யப்படும் கருக்கலைப்பு சேவையை வழங்கலாம். ஆனால், அவசரகால சிகிச்சை ஏதும் தேவைப்படின் பெண்களை **பரிந்துரைக்கத்தக்க வசதி மையங்களை அருகாமையில்** இருத்தல் அவசியம்[4,5].

இந்திய அரசு பாதுகாப்பான கருக்கலைப்பு சேவையை விரிவுபடுத்தும் நோக்கில் 2002ஆம் ஆண்டு கருக்கலைப்பிற்கு என **இரண்டு மாத்திரைகளைப் பயன்படுத்த** அனுமதி வழங்கியது. **மிஃபிபிரிஸ்ட்டோன்** மற்றும் **மைசோபுரோஸ்டோல்** என்ற மாத்திரைகள் 9 வாரம் வரையிலான கர்ப்பத்தை[3] கலைப்பதற்கு பயன்படுத்தப் படுகிறது.

விரிவான கருக்கலைப்பு சேவைகளுக்குகென தேசிய அளவிலான ஒரு வழிகாட்டி 2010ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதில் **63 நாட்கள்**[6] **வரையிலான** (9 வாரங்கள்) **கருவை** மிஃபிபிரிஸ்ட்டோன் மற்றும் மைசோபுரோஸ்டோல் ஆகிய மாத்திரைகளைப் பயன்படுத்தி கருக்கலைப்பு செய்துகொள்ளலாம் என்று குறிப்பிட்டுள்ளது. இந்த மாற்றம், கருக்கலைப்பு சட்டத்தில் இன்னும் இடம்பெறவில்லை.

---

[1] Creanga, Andreea A., et al., edited by Ganesh Dangal, "Changes in Abortion Service Provision in Bihar and Jharkhand States, India between 2004 and 2013", PLoS ONE 13.6, 2018
[2] The Medical Termination of Pregnancy Act 1971 (Act No. 34 of 1971), Government of India, 1971
[3] The Medical Termination of Pregnancy Rules: Amendment, Ministry of Health and Family Welfare, Government of India, New Delhi, India, 2003
[4] Stillman M. et al. "Abortion in India: A Literature Review", Guttmacher Institute, New York, 2014
[5] The Medical Termination of Pregnancy Rules: Amendment, Ministry of Health and Family Welfare, Government of India, New Delhi, India, 2003
[6] Acharya R. and Kalyanwala S., "Knowledge, attitudes, and practices of certified providers of medical abortion: Evidence from Bihar and Maharashtra, India", International Journal of Gynaecology & Obstetrics. 118 Suppl., 1: S40–6, Wiley,

இந்தியாவில், பாதுகாப்பான கருக்கலைப்பு சேவையைப் பெறுவதிலுள்ள தடைகள்

சமூக மற்றும் அரசியல் சூழல் உகந்ததாக இல்லை கருக்கலைப்பு தவறானது என்ற எண்ணம் மக்களிடையே பரவலாக உள்ளது எனவே அதை களைவதற்கான முயற்சிகளைத் துவங்க வேண்டும்.

சேவையை பெற முடிவதில்லை. குறிப்பாக கிராமப்புறங்களில் பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகள் கிடைப்பதில்லை

மக்கள் மத்தியில் கருக்கலைப்பு சட்டம் பற்றிப் போதிய விழிப்புணர்வின்மை

இந்திய அரசின் புள்ளிவிவரப்படி நம் நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 10 லட்சம் கருக்கலைப்புகள் சட்டப்படி செய்யப்படுகின்றது. மாறாக அரசு அங்கீகாரம் பெறாத மருத்துவ மையங்கள், மருத்துவர்கள் மற்றும் சுயமாக மருந்து மாத்திரைகள் எடுத்துக்கொள்ளுதல் மூலம் ஓராண்டில் சுமார் 20-60 லட்சம்[1] கருக்கலைப்புகள் நடக்கின்றது

[1] The Medical Termination of Pregnancy Rules: Amendment, Ministry of Health and Family Welfare, Government of India, New Delhi, India, 2003

டிவிட்டர் • இன்ஸ்டாகிராம் • திறன்
முகநூல் • நோக்கம் • பார்வைவாளர்கள்
பிரபலமானவர்கள் • உள்ளடக்கம்
வளங்கள் • திறன் • பிரச்சாரங்கள்
புள்ளி விவரங்கள் • ஆதரவு • விவரித்தல்
பகிர்வு • உலகளாவிய • ஈடுபடுதல்
டிவிட்டர் • இன்ஸ்டாகிராம் • முகநூல் •
நோக்கம் • பார்வைவாளர்கள்
உள்ளடக்கம் • பிரபலமானவர்கள்
புள்ளி விவரங்கள் • பிரச்சாரங்கள்
வளங்கள் • பிரபலமானவர்கள்

கருக்கலைப்பு + சமூக ஊடகங்கள்

ஈடுபடுதல் • விவரித்தல் • திறன் • பகிர்வு
உலகளாவிய • வளங்கள்
இன்ஸ்டாகிராம் • முகநூல் • பகிர்வு
நோக்கம் • பார்வைவாளர்கள்
உள்ளடக்கம் • பிரபலமானவர்கள்
புள்ளிவிரங்கள் • பிரச்சாரங்கள்
வளங்கள் • ஆதவு • ஈடுபடுதல்
உலகளாவிய • திறன் • டிவிட்டர் • முகநூல்
பிரச்சாரங்கள் • பகிர்வு

கருக்கலைப்பு + சமூக ஊடகங்கள்

சமூக ஊடகங்கள்

மக்களை எளிதாக ஈடுபடுத்தவும், கருத்துக்கள் குறுகிய காலத்தில் பலரை சென்றடைவதற்கும் பிரச்சனைகளை பலரின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்குமான ஒரு சிறந்த தளமாக 'முகநூல்' உள்ளது.




முக்கியஸ்தர்கள் மற்றும் பிரபலங்களுடன் தொடர்பில் இருக்க பயன்படுகிறது. செய்திகள், முடிவுகள் அறிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை பலருடன் பகிர்ந்து கொள்வதற்கான சிறந்த தளமாக 'டிவிட்டர்' உள்ளது.

சமூக ஊடகங்களை பின்வரும் விஷயங்களுக்கு மட்டுமே பயன்படுத்தவும்

1. சமூக ஊடகங்கள் மூலம் உங்களின் நோக்கத்தை அடைய முடியும் என்றால் மட்டுமே அதைப் பயன்படுத்த வேண்டும். எல்லோரும் பயன்படுத்துகிறார்கள் என்ற காரணத்திற்காக (சமூக ஊடகங்களை) அதைப் பயன்படுத்த கூடாது . என்ன செய்ய வேண்டும் என்பதை நன்கு யோசித்து எதை அடைய விரும்புகிறோமோ அதற்குத் தக்கவாறு திட்டமிட வேண்டும்.

2. உங்களுடைய இலக்கு மக்கள், நீங்கள் தோ்ந்தெடுக்கும் சமூக ஊடகத்தைப் பயன்படுத்துகிறார்களா? (உ.தா.) பாதுகாப்பான கருக்கலைப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த நீங்கள் நினைக்கிறீர்கள் என்றால் உங்களுக்கு ஒரு முகநூல் பக்கம் உள்ளது எனில் கருத்துக்களை அதில் பகிரலாம். ஏனெனில், முகநூல் மூலம் கருத்துக்கள் நிறைய மக்களைச் சென்றடையும். ஆனால், நீங்கள் பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகள் கிடைப்பதை மேம்படுத்த பிரச்சாரம் செய்ய விரும்பினால், அப்பகுதியிலுள்ள அரசாங்க அதிகாரிகளை நேரில் சந்தித்துப் பேசுவதே சிறந்த முறையாகும்.

3. முதலில் சமூக ஊடகத்தின் வாயிலாக தொடர்ச்சியாக செய்திகளை வெளியிடத் தேவையான, வளங்களும் திறமையும் உங்களிடம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திகொள்ள வேண்டும். அவ்வப்போது, செய்திகளைப் பதிவேற்றம் செய்வது பயனலிக்காது, மேலும் சிறந்த பலனை தரும் வகையான ஒரு சமூக ஊடக தளத்தை மட்டும் பயன்படுத்த வேண்டும், எல்லா சமூக ஊடகங்களிலும் தகவல்களை பகிரும்போது, உங்கள் முயற்சியின் வலிமை குறையக் கூடும். இது, நிறைய தளத்தில் செய்திகளை வெளியிட்டு குறைவான நபர்களே பயனடையக் கூடிய சூழலை ஏற்படுத்திவிடும்.


சமூக ஊடகங்கள் மூலம் என்ன செய்யலாம்
பிரச்சாரங் களை மேற் கொள்ளலாம்
தகவல் பகிர்வு மறுபதிவு செய்யலாம்
முக்கியஸ்தர்கள் மற்றும் பிரபலங்களின் ஆதரவை பயன்படுத்தலாம்
ஆக்கபூர்வமான தகவல்களை தொகுத்து வெளியிடலாம்
சர்வதேச அளவில் கொண்டாடப்படும் முக்கிய தினங்களை அனுசரித்தல்
உண்மை சம்பவங்களை பகிர்ந்து கொள்ளலாம்



பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல்

இணையதளம் மூலமாக பிரச்சாரங்கள் மேற்கொள்வதன் மூலம் குறைந்த செலவில் நிறைய மக்களை கருத்துக்கள் சென்றடையும். பாலியல், இனப்பெருக்க உரிமைகள் மற்றும் பாதுகாப்பான கருக்கலைப்பு குறித்த விஷயங்களைப் பற்றி குழுவில் உள்ளவர்களின் கருத்துக்களைப் பகிரச்சொல்லலாம். உ.தா.: " களங்கப்படுத்துவதை கைவிடுவோம்", "தீர்ப்பை ரத்து செய்யுங்கள்" ஆகிய பிரச்சாரங்கள் விழிப்புணர்வுக்காகவும், மூட நம்பிக்கைகள் மற்றும் தவறான கருத்துக்களிலிருந்து தெளிவுபெறவும் பயன்படுத்தப்படுகிறது. பாதுகாப்பான கருக்கலைப்பிற்கும் பாலியல், ஆண் பெண் சமத்துவம் மற்றும் உரிமைகளுக்கும் உள்ள தொடர்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இது போன்ற பிரச்சாரங்கள் உதவுகின்றன.

கிரியா (CREA) நிறுவனம்

நடத்திவரும் காணொலிப் பிரச்சாரத்தைப் பற்றிய விரிவான தகவல்கள் பின்வரும் இணையதள முகவரியில் கிடைக்கிறது.

http://www.creaworld.org/abortthestigma

முக்கியஸ்தர்கள் மற்றும் பிரபலங்களின் ஆதரவு

முக்கியஸ்தர்களை இப்பிரச்சாரத்தில் ஈடுபடச் செய்து அவர்களை இக்கருத்துக்கு ஆதரவாக குரல்கொடுக்கும்படி கேட்கலாம். இனப்பெருக்க உரிமைகள் பற்றி அவர்கள் பேசும்பொழுது அக்கருத்துக்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறும். அவர்களுடைய குரலை பிரச்சாரத்திற்காக பயன்படுத்தும் போது அது நிறைய மக்களை சென்றடையும். மக்களும் இதில் ஈடுபடுவர். உள்ளூரில் செல்வாக்குடையவர்கள் மற்றும் பிரபலங்களை ஈடுபடுத்த மறவாதீர்கள். உங்களுடைய முயற்சிகள் பற்றி அவர்களுடன் பேசவும் உங்களுடைய வேண்டுகோளுக்கு அவர்கள் சம்மதித்தால் அவர்களுடைய கருத்துக்களும், உங்கள் முயற்சிக்கு உதவியாக இருக்கும்.



“ உங்களின் நோக்கத்தை
அடைவதற்குத் சமூக ஊடகம்
உதவும் என்றால் மட்டுமே
அவற்றைப் பயன்படுத்தவும்.

அனைவரும் இதை
பயன்படுத்துகிறார்கள்
என்பதற்காக நீங்கள் பயன்படுத்த
வேண்டாம். நீங்கள் எதை அடைய
விரும்புகிறீர்கள் என்று யோசித்து
அதற்காகத் திட்டமிடவும்”

தகவல்கள் மக்களைக் கவரும் வகையிலும் புதுமையாகவும் இருத்தல் அவசியம்

தகவல்களின் உண்மைநிலை மற்றும் படங்களை வெளியிடும் பொழுது “உங்களுக்கு தெரியுமா” என்ற கேள்வியுடனோ அல்லது # குறியீட்டு மூலமாகவோ தகவல்களை தெரிவிக்கலாம். ஏனெனில், இந்த குறியீடு போட்ட விஷயத்தை உலகளவில் நிறைய மக்கள் பார்க்கின்றனர். நீங்கள் தகவல்களை தயாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே இருக்கும் நம்பகமான தகவல்களைப் பயன்படுத்தலாம்.



சொந்த அனுபவங்களையும் தனிப்பட்ட கருத்துக்களைப் பகிரும்போது சம்பந்தப் பட்டவர்களின் ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும்.

இதுபோன்ற உண்மைச் சம்பவங்கள் மக்களை கவரும். மேலும் அவர்களின் வாழ்க்கை யோடு தொடர்புபடுத்தி பார்க்கவும், உதவியாக இருக்கும்.



பகிர்தல் / மறுபதிவு செய்தல்

கட்டுரைகள் மற்றும் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைத் தெரிந்துகொள்ள இணையதள முகவரியை கொடுக்கலாம். அது குறித்து உங்களின் விமர்சனங்கள் மற்றும் ஆதரவை அப்பதிவில் தெரிவிக்கலாம். பல நிறுவனங்கள், இது குறித்து பணி செய்கின்றனர். அதில் சமூக ஊடக குழுக்களும் உள்ளன. நீங்கள் அவர்களின் பகிர்வுகளைப் பகிர்ந்துகொண்டு உங்களுடைய இலக்கு மக்கள் மத்தியில் மாற்றங்களைக் கொண்டுவர முயற்சிக்கலாம்.



சர்வதேச தினங்களை அனுசரித்தல்

எந்தெந்த தினங்கள் எந்தெந்த காரணங்களுக்காக கொண்டாடப்படுகிறது என்று முதலில் பட்டியலிடவும். இந்த தினங்களுக்கான பதிவை தயார்ப்படுத்தவும். உங்கள் நிறுவனத்தில் உள்ள அனைவருக்கும் அந்த பதிவை அனுப்பவும், இதை அவர்கள் தங்களின் சமூக ஊடக கணக்கின் முகப்பு பக்கத்தில் பகிர்ந்து கொள்வர்.

மார்ச் 8

சர்வதேச மகளிர் தினம்

மே 17

ஓரினச் சேர்க்கையாளர்கள், மற்றும் மாற்றுப் பாலினத்தவருக்கு எதிரான சமூக கண்ணோட்டத்தைக் களையும் சர்வதேச தினம்.

மே 28

பெண்களின் ஆரோக்கிய மேம்பாட்டிற்கான சர்வதேச தினம்

ஜூன் 2

சர்வதேச பாலியல் தொழிலாளர்கள் தினம்

செப்டம்பர் 28

சர்வதேச கருக்கலைப்பு தினம்

நவம்பர் 25

பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்பு தினம்

செய்யவேண்டியவை:



முன்கூட்டியே திட்டமிட்டு சரியான நேரத்தில் பதிவுகளைப் போடவும். நீங்கள் எந்தெந்த தகவலை பகிர விரும்புகிறீர்கள் என்பதை முன்கூட்டியே யோசித்து ஒரு மாத கால அட்டவணையில் குறித்து வைக்கவும். குறிப்பிட்ட சர்வதேச தினங்கள் வருவதற்கு மூன்று நாட்கள் முன்னதாகவே, பகிர்வை தயார் செய்து ஒரு பதிவாக வடிவமைக்கவும், அப்போதுதான் உங்கள் அலுவலகத்தில் பணி செய்பவர்கள் மற்றும் தோழமை நிறுவனங்களுடன் பகிர ஏதுவாக இருக்கும். இதன் மூலம் தகவல்கள் நிறைய மக்களை சென்றடையும்.



சமீபத்தில் கொண்டு வரப்பட்ட கொள்கை மாற்றங்கள் குறித்த விஷயங்களின் இணையத் தள முகவரியின் தொடர்பை (Link) பகிரவும்.
(உ.தா.) கருக்கலைப்பு சட்டதிருத்தம் குறித்த கட்டுரைகளை முழுமையாக பார்ப்பதற்கான தொடர்பு, பாலியல் மற்றும் இனப்பெருக்க உரிமைகள் குறித்த விவாதங்கள், கட்டுரைகள் முதலியவற்றையும் பகிரலாம். மேற்சொன்ன விஷயங்கள் குறித்து நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி பட்டறைகளைப் பற்றிய விவரங்களை மக்களுக்கு தொடர்ந்து தெரியப்படுத்தவும்.



பாதுகாப்பான கருக்கலைப்பு பற்றிய விஷயங்களை பரிமாறும் போதும், படக்காட்சிகளை பயன்படுத்தும்போதும் பொருத்தமான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும். அதற்கு இந்த உபகரணத்தில் குறிப்பிட்டிருக்கும் பரிந்துரைகளைப் பார்க்கவும்.



தோழமை நிறுவனங்களின் பகிர்வுகளை மறுபதிவு செய்யவும். உங்கள் பகிர்வுகளை அவர்களை மறுபதிவு செய்யும்படி சொல்லவும். இது பரஸ்பர உறவை மேம்படுத்த உதவும். மேலும் இது நாம் என்ன பணி செய்கிறோம் என்பதை அனைவருக்கும் தெரிவிக்க உதவியாக இருக்கும். அது மட்டுமல்லாமல் மேற்சொன்ன விஷயங்கள் குறித்து கலந்து ஆலோசிக்கவும், இணைந்து செயல்படவும் வழிவகுக்கும்.

செய்யக்கூடாதவை:



உறுதிப்படுத்தப் படாத மற்றும் நம்பகத்தன்மை இல்லாத தகவல்களைப் பகிரக் கூடாது.



சர்ச்சைக்குரிய விஷயங்கள் குறித்து மக்கள் மத்தியில் கூடான விவாதங்கள் நடைபெறும் பொழுது, நீங்கள் எதிர் மறையான கருத்துக்களை தெரிவிப்பதைத் தவிர்க்க வேண்டும்.



உங்களுடைய கருத்துக்கள் மற்றும் கொள்கைகளைக் கடுமையாக விமர்சிக்கும் வகையில் ஒருவர் கருத்து தெரிவித்தாலும் அதை எதிர்த்து எதுவும் பதிவிடாமல் அமைதி காக்க வேண்டும். தேவைப்படின் அறிவியல் ஆதாரங்களுடன் உங்கள் நிலையை விளக்கலாம்.



உங்களுடைய பதிவுகள் சுருக்க மாகவும் அதே நேரம் தெளிவாகவும் இருத்தல் அவசியம். சமூக ஊடகங் களில் படக்காட்சிகள்தான் முக்கியத் துவம் பெறுகின்றன. ஆகவே உங்கள் பதிவில் படக்காட்சிகளுக்கு முக்கியத் துவம் கொடுத்துள்ளீர்களா என்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.



ஆக்கபூர்வமான கருத்துக்களை பகிர்ந்துகொள்ளவும் உங்கள் பதிவிற்கு ஆதரவான கருத்துக் களைத் தெரிவிப்பவர்களை அங்கீகரித்து நன்றி தெரிவிக்க வேண்டும். அவர்கள் கொடுக்கும் கூடுதல் தகவல்கள் மற்றும் ஆக்கபூர்வமான விமர்சனங் களை அங்கீகரிக்க வேண்டும்.



உங்கள் பதிவுகளுக்கு என்ன பதில் கிடைத்துள்ளது. அதன்மூலம் உங்களுக்குக் கிடைத்த படிப்பினை என்ன என்பதையும் கவனிக்க வேண்டும். இதன் மூலம் அவர்கள் என்ன நினைக்கிறார்கள். நீங்கள் என்ன மாற்றத்தை ஏற்படுத்த நினைக்கிறீர்கள் போன்ற தகவல்கள் கிடைக்கலாம்.



குறிப்பிட்ட கால இடைவெளியில் உங்கள் பதிவுகள் தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.



கர்ப்பிணி பெண், குழந்தை அல்லது கருவின் படம், தெளிவற்ற முகம் கொண்ட படங்கள், கவலையாக இருக்கும் பெண்களின் படங்கள் போன்றவற்றை பயன்படுத்த வேண்டாம். ஏனெனில் இவை உரிமையை எடுத்துரைப்பதற்கு பதிலாக ஒரு தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்திவிடும்.



களங்கப்படுத்துவதை ஆதரிக்கும் வார்த்தைகளை ஒருபோதும் பயன்படுத்த கூடாது. குறிப்பாக பிறக்காத குழந்தை, குழந்தை, ஆகியவை ஒரு நபரை குறிப்பிடும் சொற்கள் ஆகவே அவற்றைப் பயன்படுத்த வேண்டாம்.

பாதுகாப்பான கருக்கலைப்பு சேவையை நாடுவதை ஊக்குவிக்க நம் பகுதியிலுள்ள கருக்கலைப்பு சேவை வழங்கும் நபர்கள் யார்யார் என்பது பற்றிய விவரங்களை நீங்கள் பதிவிட நேரிடலாம். அப்போது அது சமூக சீர்கேட்டிற்கு வழிவகுக்கும் என்றும், அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுடன் பாலுறவு கொள்வதை நீங்கள் ஆதரிக்கிறீர்கள் என்ற விமர்சனங்கள் வந்தால் அதற்கு நீங்கள் எப்படி பதிலளிக்க வேண்டும்?

உங்களுடைய பதில் மிகவும் சுருக்கமாக இருக்க வேண்டும். விரிவான கருத்துக்கள் பகிர்வதை தவிர்க்கவும். **உங்களுடைய கருத்து தெளிவாகவும் அதேநேரம் உறுதியாகவும் இருக்க வேண்டும்.** மேலும், தொடர் பதில்களை அளிக்காதீர். எதிர்மறையான கருத்துக்கள் தொடர்ந்து வந்தால் அக்குழுவிலிருந்து வெளியேறவும். மேலும் அது குறித்து புகார் அளிக்கவேண்டும்.

பெண்களின் **பாதுகாப்பு மற்றும் சுயமாண்மை நிலைநாட்டும்** வகையில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

பாதுகாப்பான கருக்கலைப்பு சேவையை பெறுவதன் மூலம் **மகப்பேறு மரணம் மற்றும் பெண்களின் உடல்நல பாதிப்புகள் குறைகிறது** என்பதை விளக்கவும்.

ஒரு பெண்ணிற்கு அவள் **உடல் மேல் அவருக்கு முழு அதிகாரம் உண்டு** என்பதையும் அதன் அப்படையில் எதைத் தேர்வு செய்வது என்ற உரிமை அவளுக்கு உண்டு என்பதையும் வலியுறுத்தவும்

களங்கப்படுத்தும் கருத்துக்கள் எவ்வாறு **பழமைவாத ஆணாதிக்க சிந்தனைகளை வலியுறுத்துகின்றன** என்பதை தெளிவுப்படுத்தவும். மேலும் அது எவ்வாறு ஒரு பெண்ணின் உரிமை மற்றும் அவளுடைய கருத்து சுதந்திரத்தை பாதிக்கிறது என்பதையும் குறிப்பிடவும்.

கருக்கலைப்பு சட்டம் என்ன சொல்கிறது என்று குறிப்பிடவும். பாலியல் மற்றும் இனப்பெருக்க உரிமைகளும் மனித உரிமைகளாகும். இந்தச் சட்டப்படி ஒவ்வொரு மனிதனும் **பயம் மற்றும் எந்தவித பாகுபாடும் இல்லாமல் தங்கள் கருத்தை வெளிப்படுத்த** சமஉரிமை உண்டு. கருக்கலைப்பு சட்டம் 1971-ல் பாதுகாப்பான வழி முறைகள் பற்றிதெளிவுபடுத்தப்பட்டுள்ளது. என்பதை குறிப்பிடவும்.

பிரச்சாரத்தைத் திட்டமிடல் • விழிப்புணர்வு குறிக்கோள்கள் • பங்குதாரர்கள் • பணி குறித்து திட்டமிடல் • மக்கள் தொகை மூடப்பழக்கழக்கங்கள் மற்றும் தவறான கருத்துக்கள் • நடைமுறைப்படுத்துதல் கண்காணித்தல் • அளவிடுதல் பங்குதாரர்கள் • பிரச்சாரத்தை திட்டமிடல் விழிப்புணர்வு • குறிக்கோள்கள் பங்குதாரர்கள் • பணிகுறித்த திட்டமிடல் மக்கள் தொகை • மூடப்பழக்க வழக்கங்கள் மற்றும் தவறான கருத்துக்கள் **கருக்கலைப்பு + பிரச்சாரம்** பங்குதாரர்கள் • பிரபலங்கள் • சட்டம் விழிப்புணர்வு • தகவல்களை அளவிடுதல் நடைமுறைப்படுத்துதல் • கண்காணித்தல் தகவல்கள் • பிரச்சாரத்தை திட்டமிடல் குறிக்கோள்கள் • விழிப்புணர்வு பங்குதாரர்கள் • பணிகுறித்த திட்டமிடல் மக்கள் தொகை • நடைமுறைப்படுத்துதல் மூடப்பழக்க வழக்கங்கள் மற்றும் தவறான கருத்துக்கள் • கண்காணித்தல் அளவிடுதல் • தகவல்கள் • சட்டம் பிரபலங்கள் • மக்கள் தொகை பணிகுறித்த திட்டமிடல் • நடைமுறைப் படுத்துதல் • பங்குதாரர்கள்

கருக்கலைப்பு + பிரச்சாரம்


இந்தியாவில் 2015 ஆம் ஆண்டு சுமார் 1.56 கோடி கருக்கலைப்புகள் நடந்துள்ளது. இனப்பெருக்க வயதில் உள்ள (15 முதல் 49 வயதுவரை)[1] 1000 பெண்களில் 47 பெண்களுக்கு கருக்கலைப்பு நிகழ்ந்துள்ளது

இந்த 1.56 கோடி கருக்கலைப்புகளில் 5 சதவீதம் அதாவது 8 லட்சம் கருக்கலைப்புகள் பாதுகாப்பற்றவை யாகும். அதாவது இந்த கருக்கலைப்புகள் பயிற்சி பெறாத அல்லது அங்கீகரிக்கப் படாத சேவை வழங்குபவர்கள் மூலமாக அரசு அனுமதி பெறாத இடங்களில் நடைபெற்றுள்ளது.[2]

மொத்த மகப்பேறு மரணத்தில் பாதுகாப்பில்லாத கருக்கலைப்பினால் நிகழும் மரணங்களின் எண்ணிக்கை சுமார் 8 சதவீதம் ஆகும்.

பாதுகாப்பான கருக்கலைப்பிற்காக பாடுபடும் நாம் அனைவரும் தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களை நன்கு புரிந்துகொண்டு அதற்குத் தக்க செயல்பாடுகளை திட்டமிடவேண்டும். இதன்மூலம் நாம் ஒரு பிரச்சனைக்கான ஆதரவை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல். மற்றவர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்து பணிபுரிய ஒரு தூண்டுகோலாக இருக்க வேண்டும்.

1.56 கோடி கருக்கலைப்புகளில்



8 லட்சம் (5%)
கருக்கலைப்புகள் அரசு அங்கீகாரம்பெற்ற சேவை மையத்தில் நடைபெறவில்லை.

பாதுகாப்பில்லாத கருக்கலைப்பின்[3] விளைவாக 8%
மரணங்கள் நிகழ்ந்துள்ளது.

[1] Singh et al., “The incidence of abortion and unintended pregnancy in India 2015”, Lancet Global Health, Volume 6, Issue 1, 2018
[2] Ibid.
[3] Ministry of Health and Family Welfare, Government of India www.mohfw.nic.in/WriteReadData/c08032016/89632563214569875236.pdf

பிரச்சாரத்தை எப்படி நாம் திட்டமிடலாம்?

நினைவில் வைத்துக்கொள்ளவும் இக்கையேடு பாதுகப்பான கருக்கலைப்பு குறித்த ஒரு பிரச்சாரத்தை படிப்படியாக எப்படி மேற்கொள்வது என்பதுபற்றி விளக்குகிறது.

இருப்பினும் பிரச்சார முயற்சிகள் இயல்பாக அமைய வேண்டும் மற்றும் குறிப்பிட்ட பிச்சனைகளுக்குத் தீர்வுகாணும் விதமாக இருக்கவேண்டும்.

1. சூழ்நிலையை புரிந்துகொள்ளவும்
2. பிரச்சாரத்தின் நோக்கத்தை தீர்மானிக்கவும்
3. பங்குதாரர்கள், பயனாளிகள் யார்? எங்குள்ளார்கள்? என்பதை வரையறுக்கவும்
4. செயல்திட்டத்தை தயார் செய்யவும்
5. செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும்
6. இப்பிரச்சாரத்தினால் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் முன்னேற்றங்களை கண்டறிதல் மற்றும் கண்காணித்தல்

செயல் 1

சூழ்நிலையைப் புரிந்துகொள்ளவும்

சூழ்நிலையை புரிந்துகொள்ள தகுந்த ஆதாரங்களை நன்கு படிக்கவும்

மாவட்ட அளவிலான தகவல் அறிக்கை அந்த பகுதியில் நடைபெற்ற ஆராய்ச்சிகள், அரசாங்க அதிகாரிகள், பயனாளிகள் மற்றும் இலக்கு மக்கள் மத்தியில் நடைபெற்ற கலந்துரையாடல்களிலிருந்து கிடைத்த தகவல்களைப் பயன்படுத்தவும்.



நம் நாட்டின் மக்கள் தொகையில் **10%** பேர் பீகார் மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களில் வசிக்கின்றனர். ஆனால் நாட்டிலுள்ள கருக்கலைப்பு சேவை மையங்களில் **1% மட்டுமே** இந்த மாநிலங்களில் உள்ளன.[7]

குட்மச்சர் (Guttmacher) நிறுவன ஆய்வு[4] தெரிவிப்பது என்னவென்றால், பீகார் மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களில் சட்டபூர்வமான கருக்கலைப்பு சேவைகள் போதுமானதாக இல்லை. இம்மாநிலங்களில் 75% மக்கள் கிராமங்களில் வசிப்பவர்கள்[5,6].

4 Ibid.
5 Kalyanwala S, et al., "Adoption and continuation of contraception following medical or surgical abortion in Bihar and Jharkhand, India", International Journal of Gynaecologists and Obstetrics,118 Suppl 1:S47–51, 2012
6 Patel L, et al., "Support for provision of early medical abortion by mid-level providers in Bihar and Jharkhand, India", Reproductive Health Matters, 17(33):70–9. pmid:19523584, 2009
7 Duggal R, et al., "The abortion assessment project India: key findings and recommendations", Reproductive Health Matters, 12 (24 Suppl):122–9, 2004

நம் நாட்டிலுள்ள சட்டங்கள், கொள்கைகள், திட்டங்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றிற்கு இடையே சரியான தொடர்பு இல்லை.

சமுதாயத்தில் நிலவும் தவறான கருத்துக்கள்.

பயிற்சிபெற்ற மருத்துவர்கள் போதிய அளவில் இல்லாதது மற்றும் பயிற்சி பெற்ற மருத்துவர்களின் சேவையை குறைந்த அளவிலான பெண்களே நாடுகின்றனர்.

போதிய விழிப்புணர்வின்மை சமூகத்தில் பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகள் பற்றி போதிய விழிப்புணர்வு இல்லை.

கருக்கலைப்பு குறித்து போதிய தகவல்கள் இல்லை. திட்டமிடுவதற்கு தேவையான புள்ளிவிவரங்கள் மிகவும் குறைவு. குட்மச்சர் நிறுவன ஆராய்ச்சியை தவிர வேறு ஒன்றும் இல்லை.

உங்களுடைய பகுதியில் பாதுகாப்பான கருக்கலைப்பு சேவையை நாடுவதிலுள்ள தடைகள் என்னென்ன என்பதை புரிந்துகொள்ளவும்.

மூடநம்பிக்கைகள் மற்றும் மூடப் பழக்கவழக்கங்கள்.


கருக்கலைப்பு சட்டம் குறித்த விழிப்புணர்வு மிகவும் குறைவு. மேலும் கருக்கலைப்பு சட்டம் மற்றும் கருவில் இருக்கும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்று கண்டறிவதை தடைசெய்யும் சட்டம் ஆகிய இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள் பற்றியும் மக்களிடையே சரியான புரிதல் இல்லை.

செயல் 2 & 3

பிரச்சாரத்திற்கான குறிக்கோளை உருவாக்குதல்

நீண்டகால மற்றும் குறுகிய கால[8] இலக்குகளைக் கண்டறியவும்

பரந்த இலக்கு: 2023 ஆம் ஆண்டிற்குள் ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள பெண்களுக்கு சட்டபூர்வமான மற்றும் பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகள் கிடைக்க உறுதி செய்தல்



திட்டவட்டமான குறிக்கோள்

சட்டப்படி மற்றும் பயிற்சி பெற்ற நபர்கள் மூலம் செய்யப்படும் கருக்கலைப்புகளின் எண்ணிக்கையை, ஓராண்டிற்குள் 25% உயர்ந்த வழிவகை செய்தல்.

மாவட்ட அளவிலான குழுவின் செயல்பாட்டை துரிதப்படுத்துதல் (மாவட்ட குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கும் என்ற நம்பிக்கையில்)

[8] SMART Objective: In designing an objective, ensure that it is Specific, Measurable, Attainable,Relevant and Time-bound

பயனாளிகளைக் கண்டறிதல்

கொள்கைகளைப்பற்றி **முடிவெடுப்பவர்கள்** மற்றும் முக்கியஸ்தர்களை இனம்கண்டு குறிக்கோளை அடைவதற்கு யாருடைய அதிகாரத்தை பயன்படுத்தலாம் என்று இனம்காணவும், தகவல்களைக் முடிவெடுப்பவர்களிடம் யார் மூலமாக கொண்டு சேர்க்கலாம் என்பதையும் கவனிக்கவும் (யார் சொல்வதை அவர்கள் கேட்பார்கள்?).

யாருடன் இணைந்து செயல்படலாம் என்பதை இனம்காணுதல், பல துறையிலுள்ள முக்கியஸ்தர்கள், கொள்கை மாற்றத்திற்கான முடிவெடுப்பவர்களிடம் தகவல்களைப் பரிமாறலாம். எனவே யாரிடம் கூட்டுசேர்ந்து இதை நடைமுறைப் படுத்தலாம் என்பதை நன்கு யோசித்துத் திட்டமிடவும்.

எதிர்ப்புகளைத் தெரிந்துவைத்தல் கருக்கலைப்பு உரிமையை எதிர்ப்பவர்கள் யார் யார் மற்றும் எம்மாதிரியான எதிர்ப்புகள் உள்ளன என்று அறிந்துகொள்வது மிகவும் அவசியம். மாநிலம் மற்றும் மண்டல அளவில் கருக்கலைப்பிற்கு எதிராக எவ்வகையான விவாதங்கள் வரக்கூடும் என அறிந்துகொள்வதும் முக்கியம்.

முடிவெடுப்பவர்கள்:
தலைமை மருத்துவ அதிகாரி
மாவட்ட சுகாதார அதிகாரி
மாவட்ட குழுவில் உள்ள உறுப்பினர்கள் (அரசு அனுமதி வழங்குவதில்).

நேரடி மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய முக்கியஸ்தர்கள்

அப்பகுதியின்
சட்டமன்ற உறுப்பினர் (MLA)

சுகாதார சேவை வழங்கும் பணியில் இருப்பவர்கள். பரந்த அளவில் பணி செய்யும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் / அரசாங்கத்திற்கு தொழில் நுட்ப உதவிபுரியும் அமைப்புகள்.

முக்கியஸ்தர்களுடன் இணைந்து செயல்படல்

ஊடகங்கள்,
கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்,
தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பெண்கள் குழுக்கள், தோழமை நிறுவனங்கள் கூட்டமைப்புகள் மகப்பேறு மருத்துவர்களின் கூட்டமைப்பு (FOGSI) வழக்கறிஞர்களின் குழுக்கள், மருத்துவ மற்றும் சட்ட அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படல்.

எதிர்ப்பாளர்கள்:

பெண்ணுரிமையை விட கருவின் உயிர் முக்கியம் என பேசிவரும் குழுக்கள்.

மற்றும் மதத் தலைவர்கள்.

செயல் 4 & 5

ஒரு செயல்திட்டத்தை தயாரித்து அதை நடைமுறைப்படுத்துதல்

நேரடியாக நடக்கும் கூட்டங்கள், பிரச்சார உபகரணங்கள், வெள்ளை அறிக்கை, ஊர்வலங்கள், புகார் மனுக்கள், பொது விவாதங்கள் பத்திரிகைச் செய்திகளை வெளியிடல், கொள்கை மாற்றத்திற்காக கூட்டப்படும் கூட்டங்கள் மற்றும் இதர கூட்டங்கள் போன்ற தளங்களைப் பயன்படுத்தலாம்.

ஒரு செயல் திட்டத்தில் படிப்படியாக என்ன என்ன நடவடிக்கைகள் இருக்கும் என்பது குறித்த தகவல்கள் கீழ்காணும்படி இடம் பெற்றிருக்கும்.

- ☑ என்னென்ன செயல்பாடுகளை மேற்கொள்வீர்கள் மற்றும் யார் அதை முன்நின்று செயல்படுத்துவார்கள்.
- ☑ காலவரையறை
- ☑ பட்ஜட் / நிதி
- ☑ திட்டமிடல் மற்றும் செய்திகளைத் தயாரித்தல்

செயல்பாடு – 1

பிரச்சார உபகரணத்தை தயாரிக்கவும்

கருக்கலைப்பு சேவைகள் குறித்த முழுமையான விவரங்கள் மற்றும் பங்குதாரருக்குத் தேவைப்படும் முக்கிய தகவல்கள் அதில் இடம்பெற வேண்டும். பிரச்சனையை / சூழ்நிலையை விளக்கும் ஓரிரு பக்க தகவல்கள், வழிகாட்டிகள், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் இது போன்ற தகவல்களை ஒவ்வொரு பங்குதாரரும் பயன்பெறும் வகையில் வடிவமைக்கவும். இதே நோக்கத்திற்காக மற்ற நிறுவனங்கள் தயாரித்துள்ள உபகரணங்களையும் பயன்படுத்தலாம்.

யார் இதை செய்ய வேண்டும்?

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் இருக்கும் பிரச்சார குழுக்கள்

காலநேரம்
15 நாட்கள்

பட்ஜட்
ரூபாய் 10,000/-

செயல்பாடு-2

நேரடியாக மாற்றத்தைக் கொண்டுவரக் கூடிய முக்கியஸ்தரர்களுடன் பேசவும்

அ. முக்கியஸ்தரர்களுடன் நேரடியாக பார்த்து பேசக்கூடிய வகையிலான கூட்டங் களுக்கு ஏற்பாடு செய்யவும், அதில் சேகரித்த தகவல்களை பகிர்ந்துகொள்ளவும். இதன் மூலம் அவர்கள் தேவைகளைப் புரிந்து கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று சிந்திப்பர் மற்றும் மருத்துவ அதிகாரி, மாவட்ட சுகாதார அதிகாரிகளிடம் பரிந்துரைகளை கேட்பர். அவர்களுக்கு தலைமை மருத்துவ அதிகாரி / மாவட்ட சுகாதார அதிகாரி அல்லது மாவட்ட குழுவில் இருப்பவர்கள் ஆகியோருடன் பேசத் தேவையான தகவல்களையும், ஆதரவையும் கொடுக்கவும்.

ஆ. முக்கியஸ்தர்கள் மற்றும் பங்குதார்களை அழைத்து ஒரு கூட்டத்தை நடத்தவும் இதில் தகவல்களை பகிர்ந்துகொள்ளவும் இது விவாதத்திற்கான ஒரு தளமாக அமையும் (அல்லது) முடிந்தால் கூட்டத்தின் இறுதியில் தலைமை மருத்துவ அதிகாரி / மாவட்ட சுகாதார அதிகாரி / மாவட்ட குழுவில் இருவப்பவர்களை அழைக்கவும். இதன் மூலம் எந்தெந்த கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன எனபதைப் பங்கேற்பாளர்கள் பகிர்ந்துகொள்ளலாம்..

யார் இதை செய்ய வேண்டும்?
தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் இருக்கும் பிரச்சார குழுக்கள்

காலநேரம்
15 நாட்கள்

பட்ஜட்
ரூபாய் 10,000/-

செயல்பாடு-3

கூட்டத்தின் தொடர் நடவடிக்கை

அ. பிரபலங்களைத் தொடர்புகொண்டு அவர்களால் எந்த அளவிற்கு செயல்பட முடிந்தது என்று விசாரிக்கவும். அவர்கள் தொடர்ந்து செயல்பட உதவி செய்யவும்.

ஆ. தலைமை மருத்துவ அதிகாரி மற்றும் மாவட்ட சுகாதார அதிகாரியை சந்தித்து பேசுங்கள் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்துக்களின் தொடர் நடவடிக்கை என்ன என்பதை கேட்கவும்.

யார் இதை செய்ய வேண்டும்?
தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பிரச்சாரக் குழு

காலநேரம்:
1 மாதம்

பட்ஜட்:
ரூபாய் 15,000/

செயல் - 6

கண்காணித்தல் மற்றும் வெற்றியைக் கணக்கிடல்

குறுகிய கால மற்றும் நீண்ட கால செயல்பாடுகள் மூலம் ஏற்பட்ட மாற்றங்கள்

முக்கியஸ்தர்களுடன் நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை

பிரச்சாரத்திற்கென தயாரிக்கப்பட்ட உபகரணங்களின் எண்ணிக்கை மற்றும் அதனை முக்கியஸ்தர்களுடன் பகிர்ந்துகொண்டதன் விவரங்கள்.

நடைபெற்ற தொடர் கூட்டங்கள் எண்ணிக்கை

கருக்கலைப்பு சேவை வழங்கும் மையங்கள் மற்றும் பதிவுபெற்ற மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

பிரச்சாரத்தை திட்டமிடும்பொழுது **செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை**

குறுகிய கால திட்டங்களை நிறைவேற்றும் வகையில் உங்களுடைய குறிக்கோள்கள் உள்ளதா என்பதை உறுதிசெய்யவும். தெளிவற்ற குறிக்கோள்களைத் தேர்வு செய்ய வேண்டாம்.

முடிவெடுப்பவர்களைப் பற்றி உங்களால் முடிந்த அளவு தகவல்களை திரட்டவும் அதனடிப்படையில் உங்கள் யுக்திகளை அதற்கேற்றவாறு வடிவமைக்கவும். கருக்கலைப்புபற்றி உங்களுக்கு தெரிந்த அளவு விஷயங்கள் முடிவெடுப்பவர் களுக்கும் தெரிந்திருக்கும் என்று நினைக்க வேண்டாம். பிரச்சாரம் பற்றிய ஒரு சுருக்க அறிக்கையை எடுத்துச் செல்லவும்

அடிப்படை புள்ளிவிவரங்களையும் எடுத்துச் செல்லவும் விரிவான அறிக்கை களை அவர்களிடம் கொடுக்க வேண்டாம்.

கொள்கை மாற்றத்திற்கு உகந்த சூழ்நிலை நிலவுகிறதா? உங்களுடைய குறிக்கோளை அடைய சரியான தருணமா இது என்பதையும் மதிப்பிடவும், இணைந்து செயல்படும் தோழமை நிறுவன உறுப்பினர்களிடம் ஆலோசனை பெற்று பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்லவும். அதுபோலவே தேசிய மற்றும் மண்டல அளவில் கொள்கை மாற்றத் திற்கு தக்க சூழ்நிலை உள்ளதா என்பதையும் கண்டறியவும்.

சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக இருக்கிறதா? குறிப்பிட்ட குறிக்கோளை சரியான நேரத்தில் அமல்படுத்த முடிகிறதா? என்று கவனிக்கவும். உள்ளூர், மாநில மற்றும் தேசிய அளவில் நிலவும் சூழ்நிலையை கவனத்தில் கொள்ள மறந்துவிடாதீர்கள். ஏனெனில், இது உங்கள் வெற்றிக்கு உதவும் அல்லது தடையாக கூட அமைந்துவிடும்.

பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தும் மொழி மற்றும் அதன் உபகரணங்கள் மிகவும் எளிமையானதாக இருக்க வேண்டும். “கருவை”, “குழந்தை” என்றோ “பிறக்காத குழந்தை” “கரு இறந்துவிட்டது“ போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது. அதுபோலவே தாய் மற்றும் கர்ப்பிணி பெண் என்ற இரு வார்த்தைகளை ஒன்றிற்குப் பதிலாக மற்றொன்றை பயன்படுத்தக் கூடாது. இது குறித்த கூடுதல் தகவல்களுக்கு கருக்கலைப்பு + தகவல் பரிமாற்றம் பகுதியை பார்க்கவும்.

crea | #ABORTTHESTIGMA
for safe abortion access & reproductive justice.

STRAT COMM CONSULTING

CommonHealth

கிரியா என்ற அமைப்பு பற்றி ....
கிரியா நிறுவனம் 2000ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. இது புதுடில்லியில் அமைந்துள்ளது. இவ்வமைப்பு பெண்களின் உரிமைக்காக பாடுபடும் ஒரு நிறுவனமாகும். இதனை, வழிநடத்துபவர்கள் இந்தியாவில் உள்ள பெண்ணியவாதிகளாவர். இந்நிறுவனம் கிராம அளவிலும், வட்டார, மாநில, நாடு மற்றும் சர்வதேச அளவிலும் பணி செய்து வருகிறது. பெண்களின் தலைமைத்துவத்தை வளர்க்கவும், பாலின மற்றும் இனப்பெருக்க நல உரிமைகளை, மேம்படுத்தவும், குழந்தைகள், பெண்கள் மற்றும் மாற்றுப் பாலினத்தவர்கள் ஆகிய அனைவரின் மனித உரிமைகளை மேம்படுத்தவும் பணி செய்துவருகிறது.
முகவரி: 7, ஜனக்புரா பி மதுரா ரோடு,
புது டெல்லி – 110014, இந்தியா

காமன்ஹெல்த்
காமன்ஹெல்த் அமைப்பு 2006 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது பெண்களின் உரிமைகளுக் காகப் பாடுபடும் ஒரு கூட்டமைப்பாகும். இதில் பல மாநிலத்தைச் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் உறுப்பினராக உள்ளனர். பாலின சமத்துவம் மற்றும் இனப்பெருக்க நல சேவைகள் அனைவருக்கும் கிடைப்பதற்காக இவ்வமைப்பு பாடுபட்டு வருகிறது. குறிப்பாக ஏழை எளிய மக்கள் மற்றும் பெண்களின் ஆரோக்கிய மேம்பாட்டுக்கான சேவைகளை இவ்வமைப்பு செய்து வருகிறது.

பாலியல் மற்றும் இனப்பெருக்க நலன் என்ற பரந்த உரிமைகளில், முக்கியமாக பாதுகாப்பான கருக் கலைப்பு மற்றும் மகப்பேறு நலனுக்கு முக்கியத்துவம் கொடுத்து காமன்ஹெல்த் பணிசெய்து வருகிறது. இந்த கூட்டமைப்பில் உள்ள உறுப்பினர்கள் பலதரப்பட்ட துறையைச் சார்ந்தவர்களாகவும், பலவிதமான பணிகளை, நாட்டின் வெவ்வேறு பகுதியில் செய்து வருகின்றனர்.

தமிழாக்கம்:
திருமதி. **ந. ஸ்ரீலக்ஷ்மி**, சென்னை

தமிழாக்கத்தை சரிபார்த்தவர்கள்:
முனைவர் **ப. பாலசுப்பிரமணியன்**
இயக்குநர், ரூசக்
மருத்துவர் **பா. சுபஸ்ரீ,**
காமன்ஹெல்த்

புத்தக வடிவமைப்பு:
திரு.**ஜி.வி.சுரேஷ்**,
ஸ்ரீநி பிரிண்டர்ஸ், செங்கல்பட்டு.